மலர்-4 இதழ்-83 பிப்ரவரி 1-15 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# தமிழ் மற்றும் சமஸ்கிருதத்தின் பெருமை அறியாதோர் குரங்கு, குருடர்: சம்பந்தர்



# இறுதி தாண்டவமான கங்காவதரணம்

இந்த படத்தில் உள்ள நடராசர் தாண்டவம் கங்காவதரணம் என்ற சிவபெருமானின் நூற்றியெட்டாவது தாண்டவம். இக்கரணம் பரதநாட்டியத்தில் இடம்பெறுகின்ற நூற்றி யெட்டு கரணங்களில் இறுதியான தாகும். இதனை பூவரு கங்கை என்றும் அழைக் கின்றனர்.

இந்த அற்புதமான சிற்பம் கும்பகோணம் ஸ்தபதி ஒருவரிடம் இருந்ததாகவும் பின்னர் Honesty Engineers &contractors என்பாரிடம் விற்கப்பட்டு அயல் நாடு சென்று விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

அவர்கள் மூலம் கிடைத்த படம் இது. நுட்பமான யோகக்கலையை விளக்கும் கடினமான தாண்டவம்.

ஒரு கையில் தீ, ஒரு கையில் உடுக்கை, ஒரு கை அபயமாகவும் மற்றொன்றை மல்லாந்து கிடக்கும் முயலகன் மார்பில் ஊன்றி தலைகீழாக இரண்டு திருவடிகளையும் இடுப்பிற்கு மேல் உயர்த்தி ஆடுகின்ற அற்புத நடனம்.

– ம.கார்த்திகேயன்.



# லட்சுமி கடாட்சம் பெற உதவும் மந்திரம்

ஸ்ரீ மஹாலக்ஷ்மி மந்திரத்தை தினமும் இரு முறை சொல்லி வழிபடுபவரின் இல்லத்தில் தனமும் தான்யமும் குறைவின்றி நிறைவாக விளங்கும்.

மந்திரம்

நமஸ்தே செல்வ ரூபிண்யை
நமஸ்தே கமலவாசினி
தேஹிமே தனப்பிராப்தி நித்யம்
சித்திர் பவதுமே சதா

தினமும் மாலை வீட்டில் விளக்கேற்றிவிட்டு இந்த மந்திரத்தை சொல்வதன் பயனாக வீட்டில் மகாலட்சுமி குடிகொள்வாள். அவள் அருளால் வீட்டில் சகல செல்வங்களும் பெருகும்.

தினமும் இந்த மந்திரத்தை கூற இயலாதவர்கள் வெள்ளிக்கிழமை களில் இதை ஜெபிக்கவும்.



# ஆத்மா எங்கேயும் தொலையலே அது எங்கேயிருக்கோ அங்கே தான் இருக்கு

ராமசுவாமி பிள்ளை ஒருமுறை சாவிகளை தொலைத்துவிட்டார்...

பகவானிடம் நேராக பதைபதைப்புடன் வந்து 'பகவானே! சாவி தொலைஞ்சுடுச்சு' என்று கூறினார்...

பகவான் சிரித்தார், "அது எங்கேயும் தொலையலே ஓய்! அது எங்கேயிருக்கோ அங்கே தான் இருக்கு. நீர் தான் மறந்துட்டீர்....

" நீர் சாவியைத் தொலைச்சுட்டேன்னு வந்து சொல்ற மாதிரிதான் இங்கே எல்லோரும் ஆத்மாவை தேடி வர்றா.

அது எப்பவும் இருக்கறபடியே இருக்கு. நாம தான் மறந்துட் டோம். அதைப் பல வழிகள்லே தேடறா. அதை இன்னும் முழுமையா அடையலேன்னு ரொம்ப வருத்தப்படறா. என்னாலே முடியலேன்னு புலம்பறா.

"எப்பவும் அதாவே இருந்துட்டு அதைத்தேடி அடைய ணும்ன்னு நினைக்கறா பாரு. அதுதான் இந்த உலகத்துகலே பெரியபுதிர் " என்றார் பகவான்....

– ரமண திருவிளையாடற் திரட்டு



# பஞ்சோபசாரம்

இறைவனை வழிபடும் முறைகளில் பஞ்சோபசாரம் எளிமையானது.

1. இறைவனின் திருவுருவ படங்களுக்குச் சந்தனம் இடுவது
2. இறைவனின் திருப்பெயரைச் சொல்லி, மலர் தூவி அர்ச்சிப்பது.
3. சாம்பிராணி, பத்தி தூபம் இடுவது.
4. நெய்தீபம், சூடம் தீபாராதனை செய்வது.
5. நைவேத்யமாக பிரசாதம் படைப்பது.

இந்த ஐந்து முறைகளில் இறைவனை வழிபடுவதை பஞ்சோபசாரம் என்று சொல்வர்.

இந்த எளிய முறைகளில் ஏதேனும் ஒன்றையாவது தினமும் கடைபிடித்து, பயபக்தியோடு இறைவனை வணங்கி, நியாயமான வழியில் வாழ்பவர்கள் நிறைந்த செல்வமும், தீர்க்காயுளும், வாழ்வுக்குப் பின் பிறப்பற்ற நிலையும் அடைவர்.

# தமிழ் மற்றும் சமஸ்கிருதத்தின் பெருமை அறியாதோர் குரங்கு, குருடர்

## சம்பந்தர்



தற்போது மொழிவாரியாக இறைவனை பலர் பல தேவைக்காக பிரிக்கின்றனர். ஒருசில இடங்களில் சமஸ்கிருதத்தை எதிர்ப்பவர்களும், ஒரு சில கோவில்களில் தமிழ்மொழியை தவிர்க்கும் கூட்டமும் பெருகிவருகிறது. இதுபோன்ற மூடர்களை குரங்கு, குருடர்கள் என்று அழைக்கிறார் சுந்தரர்.

சுந்தரமூர்த்தி நாயன்மார் திருவெண்ணைய் நல்லூர் ஈசனால் தடுத்தாட்கொள்ளப்பட்டு சிவத்தலயாத்திரைகள் சென்று திருமுறை திருப்பாட்டுகள் பாடி ஈசனை வணங்கி, அற்புதங்கள் பலநிகழ்த்தினார்.

தமிழ் மாதத்தில் ஆடிமாதம் சுவாதி நட்சத்திர நாளில் தன் நண்பன் சேரமான் பெருமாள் நாயனார் ஆண்டுவந்த கேரளநாட்டின் திருவஞ்சைக்களம் சிவாலயத்திற்கு வந்தார்.

அங்கு வீற்றிருக்கும் சிவபெருமானை 'தலைக்குத் தலைமாலை அணிந்த தென்னே, சடைமேற் கங்கை வெள்ளம் தரித்த தென்னே' என்று ஈசனை பதிகம் பாடி வழிபாடு செய்தார். அந்த சமயத்தில் அவரின் அவதார நோக்கம் பூர்த்தி ஆவதை உணர்ந்தார்.

அப்போது அசரீரி ஒலித்தது,

'சுந்தரா! நீ சிவலோகத்தை அடைய திருக் கயிலாயம் வரும் வண்ணம் யாம் வெள்ளை யானையை அனுப்பி உள்ளோம்.அந்த யானை அஞ்சைக்களம் திருக்கோயில் வெளி வீதியில் உள்ளது. அதில் ஏறி நம்மிடம் வருக' என்று ஒலித்தது.

உடனே சுந்தரர் ஆலயத்தின் வெளியே வந்து பார்க்க, அங்கு வெள்ளை யானை நின்று கொண்டிருந்தது. அதில் ஏறி அமர்ந்தார் சுந்தரர். உடனே யானை சுந்தரரை சுமந்து கொண்டு வான் வெளியில் பயணித்தது.

தன் தோழன் சேரமான் பெருமாளின் நினைவு அப்போதுதான் சுந்தரருக்கு வந்தது. சுந்தரரின் எண்ணத்தை, அஞ்சைக்களம் அருகில் இருந்த சேரமான் குறிப்பால் உணர்ந்து கொண்டார்.

வானில் சுந்தரர் திருக்கயிலாயம் செல்வதை உணர்ந்து, உடனே ஈசனை தொழுது வழிபட்டு, தன் குதிரையின் காதில் சிவாய நம ஓதி, குதிரையின் மீது அமர்ந்தார்.

உடனே சேரமானை சுமந்து கொண்டு அவனது குதிரை, வானில் திருக்கயிலாயம் நோக்கி சென்று கொண்டிருந்த சுந்தரர் அருகில் சென்றது. யானையின் முன் நின்றது குதிரை, சேரமான் சுந்தரரை தொழுதான். அப்போது வானிலேயே,

'தானெனை முன்படைத்தான்
அதறிந்துதன் பொன்னடிக்கே'

எனத்தொடங்கும் திருநொடித்தான் மலை என்னும் பதிகம் பாடுகிறார் சுந்தரர்.

பின்னர் சேரமான் பெருமாள் நாயனாருடன் சுந்தரர் திருக்கயிலாயம் அடைகிறார். அப்போது அங்கே சுந்தரரை இந்திரன், பிரமன், தேவர்கள் எல்லோரும் முன்னின்று எதிர்கொள்கிறார்கள். மந்திரங்கள் ஓதுகிற முனிவர்கள், 'இவ்வளவு தடபுடலான வரவேற்பு தரப்படும் அளவுக்கு அவ்வளவு முக்கிய மானவர் யாரோ?' என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் இவர் யார் என்று ஈசனைக் கேட்க, 'நந்தமர் ஊரன் இவன்' என்றார் ஈசன்.

அதாவது 'என் ஊரான திருவாரூரைச் சேர்ந்தவன், இவன் என்தோழன்' என்று கயிலைநாதன் ஈசன் விளக்குகிறார்.

பின்பு சுந்தரர் கூடவே திருக்கயிலாயம் வந்த சேரமான் ஈசனை போற்றி தாம் பாடிய 'திருக்கைலாய ஞானஉலா' பாமாலையை திருக்கயிலை மலையில் ஈசனின் முன்பு அரங்கேற்றம் செய்ய சுந்தரரிடம் விண்ணப்பிக்க, சுந்தரர் ஈசனிடம் கூற, மகிழ்ந்த ஈசன் 'திருக்கைலாய ஞான உலா'வை அரங்கேற்ற சேரமானைப் பணித்தார்.

சுந்தரர் திருக்கயிலை வரும் வழியில் வானில் பாடிய திருப்பதிகத்தினை ஈசன் வருணனிடம் தர, வருணன் அதனைத் திருவஞ்சைக்களத்தினில் கொண்டுவந்து சேர்த்தான்.

ஈசன் முன்பு திருக்கயிலாயத்தில் அரங்கேற்றிய சேரமான் பெருமாளின் 'திருக்கைலாய ஞானஉலா'வை சாத்தன்

எனும் சாஸ்தாவிடம் கொடுத்து பூவுலகில் வெளியிடுமாறு சொல்லி, சேரமான் வந்த வெள்ளை நிறக்குதிரையில் பூமிக்கு ஈசன் அனுப்பி வைத்ததாக சேக்கிழார் பெரிய புராணத்தில் வெள்ளானைச் சருக்கத்தில் குறிப்பிடுகின்றார்.

ஈசனின் ஆணையை ஏற்று சேரமான் சென்ற வெள்ளைக் குதிரையில் வந்திறங்கிய சாத்தன், சேரமானின் 'திருக்கயிலாய ஞான உலா'வை திருப்பிடவூரில் [தற்போதைய திருப்பட்டூர்] வெளியிட்டார்.

அவனுக்கு வடமொழியும், தமிழும் ரொம்பவே பிடிக்கும். அதனால்தான் வடமொழி பாடல்கள் பாடி தம்மை துதிக்கும் அன்பர்களிடத்தும் அன்பாய் இருக்கிறான். அதுபோல தம் பூலோக திருச்சிற்றம்பலத்து எல்லையில்தான் தமிழ் வடியும் திருமுறைகளை காத்து கிடந்தான்; அடியவர்கள் இன்றும் பாட கேட்டும் ஆடுகிறான் தில்லையிலும், அடியவர்கள் மனங்களிலும்.

அவனுக்கு வடமொழியும் (சமஸ்கிருதம்) ஒன்றுதான்... தித்திக்கும் தமிழ் மொழியும் ஒன்றுதான். **சிவன் எழுப்பிய உடுக்கை ஒலியிலிருந்து ஒரு புறம் வடமொழியும் மறுபுறம் தமிழ் மொழியும் வந்தன என்பது தமிழ்ச் சான்றோர்களின் நம்பிக்கை.**

வடமொழிக்கு பாணிணியையும் தமிழ் மொழிக்கு அகத்தியனையும் இலக்கணம் எழுத சிவ பெருமானே பணித்தான் என்றும் ஆன்றோர் கூறுவர்.

வடமொழியும், தென் தமிழும், மறைகள் நான்கும், திருநாவுக்கரசரின் ஆறாம் திரு முறை தேவாரம், வடமொழியும், தென் தமிழு மாக திகழ்பவன் சிவபெருமான் என்கிறது. ஆகையால் அடியவர்களுக்கு வடமொழியும் சிவபெருமான்தான்.. தென்தமிழும் சிவபெருமான் தான் என்கிறார் அப்பர் பெருமான்.

அதுமட்டுமல்ல,**"மந்திபோல திரிந்து ஆரியத்தோடு செந்தமிழ்ப் பயன் தெரிகிலா அந்த்தகர்க்கு எளியேன் இலேன்"** என்கிறது சம்பந்தர் திருக்கடைக்காப்பு.

அதாவது, தமிழ் சமஸ்கிருதம் ஆகிய



இரண்டின் பெருமையையும் அறியாதோரை **குரங்கு, குருடர்** என்கிறார் சம்பந்தர். அதாவது சிவபெருமானை அறியாதோரை குருடர் என்கிறார்.வடமொழியும், தென்தமிழும் கொண்டு ஈசனை அன்பால் அழைப்போம்.

உழைத்து சம்பாதிக்க தெரியாமல் குறுக்கு வழியில், தமிழ் என்ற பெயரை தவறாகப் பயன்படுத்தி வயிறு வளர்க்கும் ஒரு சில கூட்டத்தால், தற்போது இந்து மதத்திற்கு களங்கம் ஏற்பட்டுள்ளது, இந்த கூட்டத்தினருக்கு தமிழ் மொழியில் எத்தனை எழுத்துக்கள் உள்ளது என்பது கூட தெரியாது, ஆனால் தமிழ் என்ற பெயரால் இந்துக் கடவுள்களை அவமதிப்பதை இனி நாம் தடுப்போம்.


எந்த விதமான கட்டணமும் இல்லை
தரத்தில் முதலிடம்
முற்றிலும் இலவசம்





உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் ஆன்மிக மெயில் புத்தகம்
இலவசமாக படிக்க
aanmeegamalar.com
aanmeegamalr app-லும் படிக்கலாம்
உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்
வாட்சப்பில் பெற 08825844033
இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com



# யாளியிலிருந்து பிறந்த மனித இனம்

மனிதப் பிறப்பு பற்றி இன்னும் அறியப்படாத பல விஷயங்கள் உண்டு, ஒவ்வொருவரின் கருத்தும் ஒவ்வொருவகையில் அவர்களின் மேற்கோள்களுக்கு ஒத்துப்போவதால், மனிதப் பிறப்பு ஒரு புதிராகவே உள்ளது.

பள்ளிப் பாடங்களில் நாம் படித்தது 'மனிதன் குரங்கில் இருந்துதான் வந்தான்' என்று. அப்படியானால் இப்போது ஏன் மனிதன் அதுபோல் தோன்றுவதில்லை? மனிதனின் பிறப்பிற்கு காரணமான மனித குரங்குகள் (Apes) இன்றும் வாழ்கின்றனவே! அவைகள் ஏன் மனிதனை பெற்றெடுப்பதில்லை?

இதற்கு வேதாந்த மகரிஷி "மனிதன் குரங்கிலிருந்து மட்டும் வரவில்லை! 'யாளி' எனப்படும் சிங்க வகையும் சேர்ந்து உருவானவன் தான் மனிதன்" என்று எளிமையாக ஒரு விளக்கத்தை அளித்துள்ளார்.

இக்கேள்விகளுக்கு வேதாத்திரி மகரிஷி வழியில் விடை காண்போமா?

ஆம். சிங்கத்தில் ஒரு பெரிய வகைதான் இந்த யாளி. இதில் இருவகை உண்டு

1. சிம்ம யாளி சிங்க முகம் உடையது.
2. யானை யாளி துதிக்கை உடையது.

இந்த இரண்டையும் நாம் கோவில் சிலைகளில் நிச்சயம் பார்த்திருப்போம்.

இதில் சிங்க முக யாளிக்கும் ஒரு வாலில்லா பெண் மனித குரங்கிற்கும் சந்தர்ப்ப வசமாக ஒரு இனச்சேர்க்கை (Accidental Mating) ஏற்பட்டுள்ளது. இதை 'சடுதி மாற்றம்' என் பார்கள். அதாவது, இயற்கையில்...

1. வேறுபட்ட உயிரினங்கள் உடலுறவு கொள்ளாது.
2. உடலுறவு கொண்டாலும் கரு தரிக்காது.
3. கரு பிறந்தாலும் அது மலட்டுத்தன்மையாக இருக்கும்.

இதுதான் இயற்கை விதி. ஆனால் இயற்கையே தனது 3 விதிகளையும் தானே மீறித்தான் புதிய புதிய உயிரினங்களை தோற்று வித்துள்ளது.

அந்த வகையில், யாளியும் வாலில்லா பெண் குரங்கும் தற்செயலாக இணைந்துள்ளது. இதில் கருவும் தரித்து ஒரு Male Cross Product வந்துள்ளது. அந்த ஆண் மகவுதான் 'நரசிம்மர்'. அந்த நரசிம்மர் கருவுருவாக்கும் (Reproducing Ability) தன்மையுடன் பிறந்துள்ளார். அவர் மீண்டும் வாலில்லா பெண் குரங்குகளுடன் சேர்ந்து வாழ்ந்து, அவற்றிற்கு பிறந்த குழந்தைகளே மனிதர்கள்!

வேதாத்திரி மகரிஷி அவர்கள் தனது உரை களிலும் 'ஞானமும் வாழ்வும்' நூலிலும் இந்த மனித பரிணாம உண்மைகளை கூறியுள்ளார்.

இந்த யாளியானது சிங்கத்தை விட பெரியதும் கொடூரமானதுமாகும். தன் இனத்தையே கொன்று தின்னும் குணமுடையது. அதனால் இவ்வினம் முற்றிலும் அழிந்து விட்டது.

மனிதனின் பரிணாம ரகசியத்தை நமது வைணவ பெரி யோர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடித்து தசாவதாரத்தில் 4– வது நரசிம்ம அவதாரமாக வைத்துள்ளனர்.

மேலும், குற்றாலம் சித்திர சபை கோவிலில் இந்த யாளியை மிகவும் தத்ரூபமாக வரைந்து வைத்துள்ளனர்.

நர+சிம்மர். நர என்றால் மனிதன்.

நரசிம்மரின் தாய் வாலில்லா குரங்கு.

தந்தை யாளி.

அவருக்கு தாய் போன்ற நிமிர்ந்த உடல், தந்தை போல் சிங்க முகம். இவர்தான் உண்மையில் நம் எல்லோருக்கும் தந்தை. இவர் உருவாக்கிய குடும்பம்தான் பரவி பெருகி இன்று 800 கோடி மக்கள் தொகையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

சிங்கத்திற்கு முகம் சதுரமாக இருக்கும். மனிதனுக்கும் அப்படியே. சிங்கத்தின் தோல் மயிர் குறைவு. நமக்கும் அவ்வாறே. குரங்கு சைவமாயிற்றே! ஆனாலும் ஏன் மனிதன் அசைவம் சாப்பிடுகிறான் என்பது இப்போது புரிகிறதா?

ஆம். அது சிங்கத்தின் குணமே!

மேலும் சில காட்டுவாசிகளும் மந்திரவாதி களும் அகோரிகளும் நர(மனித)மாமிசம் சாப்பிடுவதும் எல்லாம் யாளியின் மரபு (Genes) செய்யும் வேலையே!



ஆண்சிங்கத்திற்கு மட்டுமே மீசையும் தாடியும் (பிடரி மயிர்) இருக்கும். பெண் சிங்கத்திற்கு இருக்காது. அதே மரபினால் தான் ஆண்களுக்கு மட்டும் மீசை தாடி இருப்பது!

குரங்கு முகத்தையும் சிங்கத்தின் முகத்தையும் சேர்த்துப் பாருங்கள். நரசிம்மரின் முகம் கிடைக்கும். அதை மீண்டும் குரங்குடன் சேர்த்துப் பாருங்கள். அதுவே மனித முகம்!

மனிதனின் பிறப்பிற்கு காரணமான யாளி இப்போது இல்லை. அதனால் மனிதன் இனி குரங்கிலிருந்து வரவே முடியாது.

'சடுதி மாற்றம்' 3 விதிகளில் முதல் இரு விதிகளை இயற்கை தானே மீறுவதை இன்றும் நீங்கள் காணலாம்.

1. நாய் பன்றியுடன் சேர்க்கை கொள்ளுவதை இன்றும் நமது ஊர்களில் அரிதாக காணலாம். நாயானது ஆடு, பூனை, குரங்கு, கோழி ஆகியவைகளுடன் இணை சேருவதை Youtube–ல் காணமுடிகிறது. ஆனால் அவை கருதரிக்காது.



2. குதிரையும் கழுதையும் அருகருகே இருந்தால் தானாகவே இணை சேர்ந்து விடும். கருவும் தரிக்கும். அதுதான் 'கோவேரி கழுதை' எனப்படுகிறது. ஆனால் இக்கழுதை மலட்டுத்தன்மையுடன் தான் இருக்கும். அது மீண்டும் ஒரு குதிரை அல்லது கழுதையுடன் உறவு கொண்டாலும் கருதரிக்காது. காஷ்மீர் போன்ற மலைப்பகுதிகளில் அதிக தூரம் ஓடவும் பாரம் இழுக்கவும் இவை இன்றும் உருவாக்கப்படுகின்றன.

மேலும் இது போல் நாயும் நரியும் இணை சேர்ந்தாலும் குட்டிகள் பிறக்கும். ஆனால் அவை மலடாகவே இருக்கும். செய்தித்தாள்களில் எப்போதாவது, மலையடிவார கிராமத்தில் பெண் நாயுடன், காட்டிலிருந்து வந்த ஆண் நரி இணை சேர்ந்து, நாய்க்கு நரிக்குட்டிகள் பிறந்து அவை ஊளையிடும் செய்திகளைக் காணலாம். அக்குட்டிகள் வளர்ந்தாலும் இனவிருத்தி செய்ய முடியாது.

இவ்வாறு தனது இரண்டு விதிகளையும் மீறும் இயற்கை, மூன்றாவது விதியையும் மீறும் போது தான் புதிய உயிரினங்கள் உருவாகி, அவை தனி இனமாகின்றன.

வேதாத்திரி மகரிஷி அவர்கள் தனது உரையில் "இயற்கை என்ற நந்தவனத்தில் இறுதியாக பூத்த மலரே மனிதன்!" என்று கூறியுள்ளார். அதனால் இதற்கு மேல் ஒரு புதிய உயிரினம் வர வாய்ப்பே இல்லை!

மேலும் இன்று உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும், இறைநிலை படிப்படியாக மனிதனாக பரிணமிக்க எடுத்துக் கொண்ட பல்வேறு முயற்சிகளே, வடிவங்களே ஆகும்.

தன் பெருமைகளையும் மதிப்பையும் தானே உணர்ந்து அறிவில் முழுமை பெறவே மனிதனாக வந்துள்ளது. இறைநிலையின் நோக்கம் ஆறறிவு மனிதனில் முழுமையடைவதால் இதற்கு மேல் ஏழாம் அறிவு என்றோ புதிய உயிரினம் என்றோ ஒரு பரிணாமம் நிகழ்த்த இறைநிலைக்கு அவசியம் இல்லை.



# திருநீறு, குங்குமம் சந்தனம் அணிவது ஏன்.?



அறுகம்புல்லை உண்ணுகின்ற பசுமாட்டின் சாணத்தை எடுத்து உருண்டையாக்கி வெயிலில் காயவைக்க வேண்டும். பின் இதனை உமியினால் மூடி புடம் போட்டு எடுக்க வேண்டும். இப்போது இந்த உருண்டைகள் வெந்து நீறாகி இருக்கும். இதுவே உண்மையான திருநீறாகும்.

இது நல்ல அதிர்வுகளை மட்டும் உள் வாங்கும் திறன் கொண்டது. எம்மைச் சுற்றி அதிர்வுகள் இருக்கின்றன என்பது யாவரும் அறிந்ததே. எம்மை அறியாமலே அதிர்வுகளின் மத்தியில்த் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எமது உடலானது இவ் அதிர்வுகளை ஏற்றுக் கொள்ளுகின்றது. திருநீறானது நல்ல அதிர்வுகளை ஏற்றுக் கொள்ளும் தன்மை வாய்ந்தது.அந்தவகையில் உடலின் முக்கிய பாகங்களில் திருநீறு இட்டுக் கொள்ளும் வழக்கம் இந்துமதத்தவர்களிடம் காணப்படுகின்றது.

தனது உடலிலே சாம்பல் சத்துக்குறைந்து விட்டால், இலங்கை போன்ற வெப்பமான நாடுகளில் வளரும் கோழி இனங்கள் சாம்பலிலே விழுந்து குளிப்பதைக் கண்டிருப்பீர்கள். புறவை இனமே தன் தேவை தெரிந்து சாம்பலை நாடுகின்றதல்லவா! அதே போலத்தான் மனிதனும் தன் மூட்டுவலி தோற்றுவிக்கும் இடங்களில்நீர்த்தன்மையை உறிஞ்சவல்லதிருநீற்றை அணிகின்றான். பசுமாட்டுச்சாணத்தை எரித்து திருநீறு செய்கின்றார்கள். மாடு அறுகம்புல் போன்ற பல வகையான புல்வகைகளை உண்டு தனது உடலைத் தேற்றிச் சாணம் போடும். அச்சாணம் தீயிலிடப்படும் போது ஏற்படும் இரசாயண மாற்றங்கள் உடலுக்கு மருத்துவத்தன்மையைக் கொடுக்கின்றது.

சந்தனம் இரு புருவங்களுக்கும் இடையில் இடுகின்ற போது, முளையின் பின்பகுதியில் ஞாபகங்கள் பதிவுசெய்து வைத்திருக்கும் Hippocampus என்னும் இடத்திற்கு ஞாபகங்களை சிறப்பான முறையில் அனுப்புவதற்கு இந்த frontal cortex சிறப்பான முறையில் தொழிற்படும். உடலுக்குக் குளிர்ச்சியூட்டும் சந்தனத்தை நெற்றியிலும் உடலின் பல பாகங்களிலும் இந்து சமயத்தவர் அணிந்திருக்கும் காட்சி நகைச்சுவையாகப் பார்வைக்குத் தோன்றினாலும் அற்புதமான காரணமும் அதில் உண்டு பார்த்தீர்களா!

– சொரூபன், இலங்கை

# தலைக்கனத்தை நீக்கும் பெரியகோவில்

தஞ்சைப் பெருவுடையார் கோயில், தஞ்சைப் பெரிய கோயில், பிரகதீஸ்வரர் கோவில், என்று பல பெயர்களில் அழைக்கப்படும் தலம்தான் பெருவுடையார் கோயிலாகு. இத்தலம் தஞ்சாவூரிலுள்ள சோழ நாடு காவிரி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள திருவிசைப்பா பாடல் பெற்ற சிவன் கோயிலாகும். இக்கோயில் உலகப் பாரம்பரியச் சின்னமும் ஆகும். இந்தியாவில் அமைந்துள்ள மிகப்பெரிய கோவில்களில் இதுவும் ஒன்று, தமிழர்களின் கட்டிடக்கலைக்குச் சான்றாக விளங்குகிறது இக்கோயில்.

கிபி 10ஆம் நூற்றாண்டில் புகழ் பெற்ற மன்னர் முதலாம் இராசராச சோழன் இக்கோயிலைக் கட்டுவித்தார். 1003 –1004 ஆம் ஆண்டு தொடங்கி 1010 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட இந்த கோயிலுக்கு 2010 ஆவது ஆண்டோடு 1000 ஆண்டுகள் நிறைவடைந்தன.

1987 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (UNESCO) உலகப் பாரம்பரியச் சின்னமாக அறிவித்தது.

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்திற்கு உட்பட்ட 88 கோயில்களில் இக்கோயிலும் ஒன்றாகும்.

இடைக்காலச் சோழர்கள் காலமான கி.பி. 985 முதல் 1070 வரை சோழர் கலை உயர்வடைந்து உச்ச நிலையில் இருந்தது. இடைக்காலச் சோழர் காலத்தில் ஏராளமான சிவஆலயங்கள் கட்டப்பட்டன.

காஞ்சியில் ராஜசிம்மனால் கட்டப்பட்ட கயிலாயநாதர் கோயில் ராஜராஜனை மிகவும் கவர்ந்தது. அதே போல் ஒரு கோவிலைக் கட்ட எண்ணிய இராஜராஜன் தஞ்சையில் பெரிய கோவிலைக் கட்டினான். பெரியகோவிலின் அமைப்பு, திருவாரூர் தியாகராஜர் கோவிலில் உள்ள அசலேஸ்வரர் சந்நிதியின் மாதிரியைக் கொண்டு உருவானதாகவும் செய்தி உண்டு.

திருவிடைமருதூர்க் கோவிலில் உள்ள மூலவரின் பெயர் மகாலிங்கம். இராஜராஜ சோழனின் பெயருக்கு ஏற்றார் போல் அந்த விக்கிரகம் இல்லை என்று எண்ணம். பின்னாளில் பெருவுடையார் என்ற பெயருக்கு ஏற்ப லிங்கமும் கோவிலும் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் தான் இக்கோயிலைக் கட்டத் தூண்டியது என்றும் ஓர் செய்தி உண்டு.

இக்கோயிலின் தலைமைச் சிற்பி குஞ்சர மல்லன் ராஜராஜப்பெருந்தச்சன் எனக் கோயிலின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. கோயிலின் அடிப்பாகம் 5 மீட்டர் (16 அடி) உயரம் கொண்டுள்ளது.

ஒரே கல்லில் அமைக்கப்பட்டுள்ள நந்தி 20 டன் எடையும், இரண்டு மீட்டர் உயரம், ஆறு மீட்டர் நீளம், இரண்டரை மீட்டர் அகலமும் கொண்டதாகவும், லேபாக்ஷி கோயில் நந்திக்கு அடுத்தபடியாக, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய நந்தியுமாகவும் உள்ளது.

முதன்மைக் கடவுளான இலிங்கம் 3.7 மீட்டர் உயரமானது. வெளிப் பிரகாரம் 240x125மீ. அளவிலானது. 108 பரத நாட்டிய முத்திரைகளைக் காட்டும் நடனச் சிற்பங்கள் வெளிச்சுவற்றின் மேற்பகுதியில் வடிக்கப்பட்டுள்ளன.

பிற்காலத்தில் பாண்டியர்களால் 13 ஆம் நூற்றாண்டில் அம்மன் சன்னிதியும் விசயநகர அரசர்களால் முருகர் சன்னிதியும் கட்டப்பட்டு, மராத்திய அரசர்களால் விநாயகர் சன்னிதி புதுப்பிக்கப்பட்டது. தஞ்சை நாயக்கர்களாலும் இக்கோயில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

### கோயில் அமைப்பு

முக்கியமான கட்டடம் 150 அடி நீளம் இருக்கிறது. மிகப் பிரம்மாண்டமான விமானம் எகிப்தியப் பிரமிடுகளைப் போல கூர்நுனிக் கோபுரமாக அமைந்து கர்ப்பக்கிரகத்திலிருந்து 190 அடி உயரத்திற்கு ஓங்கி வளர்ந்திருக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கள் அடுக்கியும் கோர்த்தும் வைத்து கட்டப்பட்டுள்ளது. கோள்களின் கதிர்வீச்சுக்கள் அதன் மையப் பகுதியில் குவியுமாறு வடிவமைக்கப்படுள்ளது. புவி அதிர்வுகளினால் பாதிப்புகள் ஏற்படுவதில்லை. கதிர்வீச்சுக்களின் குவியலில் சோழ கோவில்களில் நிலை நிறுத்தப்பட்டுள்ள ஆவுடை லிங்கங்கள்



# தான் என்ற அகம்பாவத்தை அழித்துவிடும் சிவபெருமான்

தஞ்சை பெரிய கோவில் உலக அளவில் பெயர் பெற்றிருந்தாலும், இத்திருக்கோவிலின் கட்டுமானப்பணி முதற்கொண்டு கும்பாபிஷேகம் வரை அனைத்திலும் தெய்வீகத் தன்மை நிறைந்துள்ளது.

மிகப் பெரிய சக்ரவர்த்தியாக இருந்தாலும், சாதாரண மோர் விற்கும் பெண்ணாக இருந்தாலும் சிவனுக்கு முன் சமம் என்பதை உணர்த்துவது இந்த பெரியகோயில் ஆகும்.

இது இன்று வரை பல்வேறு வரலாற்று சான்றுடன் விளங்கி நிற்கின்றது.



இக்கோயிலுக்கு செல்பவர்கள் எளிமையுடன், **தான் என்ற அகங்காரத்தை** கோவிலின் வாசலில் இறக்கி வைத்துதான் செல்ல வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் தான் என்ற அகங்காரத்துடனும், படாடோபத்துடனும் இத்தலத்திற்கு சென்ற பலர் ஒன்றும் இல்லாத சாதாரன மனிதனாக மாற்றி வாழ்க்கையை உணர வைத்துள்ளான் இறைவன்.

பதவி, பணம், போன்ற ஆடம்பரத்தை இறைவன் ஏற்பதில்லை, நான் பெரியவன் நீ பெரியவன் என்பதையும் பொருட்படுத்துவதில்லை.

இதனால்தான் இந்த திருக்கோயிலுக்கு பதவியில் இருக்கும்போது யாரும் பெரும்பாலும் கலந்து கொள்வதில்லை. அப்படியே வந்தாலும் முன்பகுதி வாசலை தவிர்த்து பின்பக்கமாக வந்து செல்வதை இன்றும் வழக்கமாக வைத்துள்ளனர்.

தொடர்ந்து சக்தியுள்ள மையமாக புகழுடைய கோவில்களாக சிறந்து விளங்குகின்றன.

எல்லோரா குகைகள் (கி.பி. 700) எப்படி ஒரு பெரிய மலையை குடைந்து கட்டப்பட்டதோ; அது போல் தஞ்சை பெரிய கோவில் விமானமும் (கி.பி. 1000) ஒரு பெரிய மலையை அந்த கோபுர வடிவத்திற்கு வெட்டப்பட்டபின், நுட்பமாக சிற்பங்கள் அந்த விமானத்தில்மேல் செதுக்கப்பட்டு வடிவமைக்கப்பட்டு உள்ளது.

### இடைச்சிக் கல்

தஞ்சைப் பெருவுடையார் கோவில் கட்டுமான பணி நடந்து கொண்டிருந்தது. அழகி என்னும் இடையர் குல மூதாட்டி சிவத்தொண்டு செய்ய விரும்பினார். ஏழை மூதாட்டி தன்னால் இயன்ற தொண்டாக கோவில் கட்டி முடிக்கும் வரை கோவில் கட்டும் சிற்பிகளின் தாகத்தை போக்கும் பொருட்டு தினமும் அவர்களுக்கு தயிர், மோர் வழங்கி வந்தார். இதனை அறிந்த மன்னர் அருண்மொழிவர்மன் இடையர் குல மூதாட்டியின் சிவத்தொண்டை அனைவரும் அறியும் வண்ணம் 80டன் எடை கொண்ட கல்லில் அழகி என்று பெயர் பொறித்து, அதனை ராஜகோபுரத்தின் உச்சியில் இடம் பெற செய்தார். அந்த கல் இடைச்சிக் கல் என்று அழைக்கப்படுகிறது. அந்த கல்லின் நிழலே இறைவன் பெருவுடையார் மேல் விழுகிறது.

நந்திமண்டபத்திற்கு தெற்கே உள்ள திருச்சுற்று மாளிகையில் வடதிசையை நோக்கியபடி உள்ள நந்தியே இராஜராஜனால் பெருவுடையாருக்கு எதிரே அமைக்கப்பட்டதாகும். பின் தஞ்சை நாயக்க மன்னர்கள் சிவலிங்கத்துக்கு இணையான பெரிய நந்தியை நிறுவினர்.

www.aanmeegamalar.com







முதலில் அமைக்கப்பட்ட நந்தி கேரளாந்தகன், இராஜராஜன் வாயில்களுக்கு இடைப்பட்ட பகுதிக்கும் பின்னர் திருச்சுற்று மாளிகைக்கும் மாற்றப்பட்டது.

### சந்நிதிகள்

சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள, முக்கியமான கோயிலையும், அதனோடு கூடிய மண்டபங்களையும் தவிர, சண்டிகேஸ்வரர், அம்மன், நடராசர், வராகி, முருகர், விநாயகர் மற்றும் கருவூர்த் தேவர் கோயில்களும், இவ் வளாகத்துள் அமைந்துள்ளன.

மூலவருக்கு பீடம் இல்லை. இக்கோவிலின் அம்மன் பெரியநாயகியாவார்.

கருவூர் சித்தர் சந்நிதி இக்கோவிலில் கருவூர் சித்தருக்கென தனி சந்நிதி அமைந்துள்ளது.

வராகி அம்மன் சந்நிதி இது சோழர் கால கட்டுமானமாக இருக்க வேண்டும் என்றே கருதப்படுகிறது. வேறெங்கிலும் இல்லாத வகையில் இந்த திருவுருவிற்கு இரண்டு கரங்கள் மட்டுமே இருப்பது வியக்கத்தக்கது.

2020 ஆம் ஆண்டு பிப்ரவரி 05ம் தேதி இத்திருக்கோவிலுக்கு குடமுழுக்கு நடைபெறுகிறது. சிவனருள் பெற இத்தலத்திற்கு ஒருமுறை சென்று வருவோம்.

# பழுதடைந்த படங்களை என்ன செய்வது



வீட்டில் பழுதடைந்த, உடைந்து போன அல்லது தேய்ந்து போன விக்ரஹங்கள், படங்களை என்ன செய்வது? என்று பலர் கேட்கும் கேள்வியாக உள்ளது.

இந்த பிரச்சினை கேள்வி எல்லோருக்கும் இருப்பதே. பல பேர் தங்கள் வீட்டில் பின்னமான விக்ரகங்கள், படங்கள் ஏதோ ஒரு கோவிலிலோ அல்லது சாலையோரத்திலோ, மரங்கள் அடியிலோ போட்டுவிட்டு போய்விடுவதுண்டு.

இப்படி செய்வது மிகப் பெரிய பாவமாகும்.

வீட்டில் இருந்தவரை பூஜைகள் செய்து பிறகு அவசியம் இல்லாத போது, பாழடைந்தவற்றை உதாசீனப்படுத்தக்கூடாது. அப்படி சாலையோரத்தில் உள்ள நமது ஹிந்து தெய்வங்களின் படங்களை பார்த்து இதர மதத்தவர்கள் நம் மதத்தை குறித்து பலவாறாக கிண்டலும், கேலியும் செய்ய நாமே வாய்ப்பை தரக்கூடாது.

மற்ற மதத்தவரின் தெய்வ படங்களை அது போல் எங்காவது கண்டதுண்டா என்பதை யோசித்து பாருங்கள்.

பயன்படுத்த முடியாத தெய்வ படங்களை, விக்ரஹங்களை அக்னி பகவானுக்கு ஆஹுதி கொடுப்பது (சமர்ப்பிப்பது) நல்லது.

அதெப்படி ஸ்வாமி படங்களை அக்னியில் போடுவது சரிதானா என்ற சந்தேகம் உங்களுக்கு வரும். ஆனால் அக்னி பகவான் ஸர்வ பக்ஷகன். எல்லா சமயத்திலும் புனிதமானவர். அதனால் பவித்ராக்னியில் ஸ்வாமி படங்களை சமர்ப்பிப்பது தவறில்லை.

அப்படி இல்லையென்றால் ஓட்டமுள்ள நதியிலோ, ஏரியிலோ 'நிமர்ஜனம்' (கரைத்தல்) செய்யலாம். ஆனால் அக்னி பகவானுக்கு சமர்பித்தாலும், நதியில் போடுவதாக இருந்தாலும், முதலின் அந்த விக்ரஹத்தை படத்தை நமஸ்கரித்து "கச்ச கச்ச ஸுரஸ்ரேஷ்ட ஸ்வஸ்தான பரமேஸ்வர" என்று கூறி விடவேண்டும். இதுவும் நிமர்ஜனம் (கரைப்பது) என்பதை தெரிந்து கொள்ளவும்.

www.aanmeegamalar.com

# தமிழர் வேறு இந்து வேறு

# இந்து மதத்தை அழிக்க புதிய யுக்தி

தற்போது இந்துக்கள் தமிழர்கள் கிடையாது, தமிழர்கள் இந்துக்கள் கிடையாது என்ற வாசகம் சமூக வலைதளங்களில் அதிகம் பரப்பப்படும் வாசகமாகும்.

உண்மையை ஆராய்ந்து பார்த்தால், இவ்வாறு பதிவிடுபவர்கள் கடவுள் மறுப்பு கொள்கையாளர்கள், அல்லது மாற்று மதத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.

உண்மையில் இதுபோன்றவர்களுக்கு தமிழின் மீதும் தமிழர்கள் மீதும் அக்கறை என்பதில்லை, எப்படியாவது இந்து மதத்தையும், இந்து தெய்வங்களையும் அவமதிப்பது ஒன்றே நோக்கமாக இருக்கும்.

தமிழன் இந்து மதத்தைச் சேர்ந்தவன் இல்லை என்றால், தமிழ்நாட்டை ஆண்ட தமிழ் மன்னர்கள் கட்டிய கோவில்களில் இந்து கடவுள் இல்லாமல் யார் இருக்கிறார்கள் என்று கேட்டால் பதில் சொல்ல தயங்குகின்றனர்.

இந்து என்பது இந்தியத் துணைக்கண்டத்தின் மெய்யியல், சமயங்கள் மற்றும் பண்பாடு ஆகியவற்றைக் குறிக்கும் அடையாளச் சொல்லாகும்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் படி "இந்து" என்பது இந்திய சமயங்களைக் குறிக்கிறது.

சைவம், வைணவம், சமணம், பௌத்தம் சீக்கியம் போன்ற பிரிவுகளின் சேர்க்கையை பொதுவாக இந்து சமயம் என்று குறிப்பிடப்பட்டது.

ஆரம்ப காலத்தில் சமணம், பௌத்தம் சீக்கிய சமயங்கள் உருவாவதற்கு முன்பு, சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், ஸ்மார்த்தம் என்ற பிரிவுகளில் ஒரே மரத்தில் பல கிளைகளைப் போன்று பிரிந் திருந்தனர்.

**சைவம்:** சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயப் பிரிவு.

**வைணவம்:** விஷ்ணுவையும் அவரது பத்து அவதாரங்களையும் வணங்கும் சமயப் பிரிவு.

**சாக்தம்:** சக்தியை வணங்கும் சமயப் பிரிவு.

**கௌமாரம்:** முருகனை வணங்கும் சமயப் பிரிவு (குமரனை வணங்குவது கௌமாரம்).

**சௌரம்:** சூரியனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயப் பிரிவு.

**காணாபத்தியம்:** விநாயகரை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயப் பிரிவு.

**ஸ்மார்த்தம்:** சிவன், சக்தி, விஷ்ணு, கணேசர், சூரியன் மற்றும் முருகனை வணங்கும் சமயப் பிரிவு

## ஒவ்வொரு பிரிவின் கருத்துக்கள்

**சைவம்:** முக்தி அடைந்தபின் ஜீவனும் பரமனும் இரண்டல்ல. இந்த உண்மையை சிவனின் அருளினால் உணரலாம். சைவத்தின் உட்பிரிவுகளில் இக்கருத்தில் ஒரு சில வேறுபாடுகள் உண்டு.

**சாக்தம்:** சக்தியை வழிபடுவதால் அத்வைத மோக்ஷம் அடையலாம்.

**வைணவம்:** ஜீவனும் பரமனும் என்றென்றென்றும் ஒன்றாகாது. திருமாலின் அருளால் ஜீவன் அடைய வேண்டியது இறை பக்தியும், இறை இன்பமும் தான்.

**ஸ்மார்த்தம்:** ஜீவன் மாயையினால் தன் சச்சிதானந்த நிலையினை உணராமல் இருக்கலாம். ஞானம் இந்த மாயை எனும் திரை தனை விலக்க வல்லது.

## இறைநிலை அடையும் வழி

**சைவம்:** பக்தி எனும் அடித்தளத்தில் நின்றவாறு, த்யானம், தவம் போன்ற சாதனைகளை செய்வது.

**சாக்தம்:** பக்தியோடு சேர்ந்து மந்திர தந்திர பயிற்சிகள்.

**வைணவம்:** அதீத பக்தியில், தன்னை முழுதுமாய் இறைவனிடம் அர்ப்பணித்தல்.

**ஸ்மார்த்தம்:** ஞான யோகமே முதன் மையான வழி. பக்தி யோகம், கர்ம யோகம், ராஜ யோகம் இவையும் உயர் ஞானத்தினுக்கான வழிகள்.

## வேதங்கள்

**சைவம்:** வேதங்கள், சிவ ஆகமங்கள், சிவ புராணம்.

**சாக்தம்:** வேதங்கள், சக்தி ஆகமங்கள் (தந்திரங்கள்), புராணங்கள்.

**வைணவம்:** வேதங்கள், வைணவ ஆகமங்கள், இதிகாசங்கள், பிரபந்தம்

**ஸ்மார்தம்:** வேதங்கள், ஸ்மிர்த்தி, புராணங்கள், இதிகாசங்கள்.

## கிளைக்குள் கிளையான வரலாறு

இந்த நிலையில் மேற்கண்ட பிரிவுகளில் இருந்து தோன்றிய மகான்கள் ஞானிகளான புத்தர், மகாவீரர் போன்றவர்கள், மேற்கண்ட பிரிவினரின் கருத்துக்கள் ஒருசிலவற்றையும், அக்காலத்திற்கு உகந்த சில கருத்துக்களையும் வலியுறுத்தி ஒருசில பிரிவுகளை உருவாக்கினர்.

அவ்வாறு தோன்றி யதுதான், சமணம், பௌத்தம், சீக்கியம், (உலகின் பல மூலை முடுக்குகளில் பரவி யுள்ள மதங்களும், மேற்கண்ட கிளை களிலிருந்து முக்கிய சாராம் சத்தை எடுத்து, அவர்களின் வாழ்க்கை முறைக் கேற்ப அவற்றை ஒரு மதமாகவே மாறியுள்ள தாகவும் கூறப்படுகிறது.)

ஆனால் பல கிளைகள் இருந்தாலும் போட்டி பொறாமை போன்றவை தலைதூக்கும் சமயத்தில்தான், இவற்றை ஒருங்கிணைத்து இந்து மதம் என்ற பெயரில், தனித்தனியாக இருந்த பிரிவுகள் அனைத்தையும் ஒரே குடையின் கீழ் முன்னோர்கள் கொண்டு வந்தனர்.



இதற்கு பெரும் முயற்சி எடுத்தவர்களில் மிகவும் முக்கியமானவர் ஆதிசங்கரர்.

சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், சௌரம், காணாபத்தியம், ஸ்மார்த்தம், சமணம், பௌத்தம் சீக்கியம் ஆகிய பிரிவுகளை ஒருங்கிணைந்து உருவாக்கப்பட்ட மதத்தின் பெயர்தான் இந்து மதம், சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், சௌரம், காணாபத்தியம், ஸ்மார்த்தம், போன்றவையின் கலவையாக உருவாக்கப்பட்டதுதான் இந்துக் கோயில்கள்.

தென்னிந்தியா மற்றும் வட இந்தியாவில் வழிபாட்டு முறை மற்று கோவில் அமைப்புகளில் ஒருசில மாற்றங்கள் இருந்தாலும், தெய்வங்கள் ஒன்றாகத்தான் காட்சியளிக்கின்றன.

சமணம், பௌத்தம், சீக்கிம் போன்றவை கோவில் அமைப்புகளும் வழிபாட்டு முறையிலும் வேறுபட்டிருந்தாலும், அவர்களும் இந்து மதம் என்ற குடையின் கீழே வருகின்றனர். இவர்கள் முதன்மை கடவுள், புத்தர், மகாவீரர், குருநானக் போன்றவர்களாக இருந்தாலும், சிவன், ராமர், அம்பாள், விநாயகர் போன்ற தெய்வங்களையும் வழிபடுவார்கள்.

இதுதான் இந்து மதத்தின் மேலோட்டமான வரலாறு.

**தமிழ் மன்னர்கள் கட்டியது எல்லாம் இந்துக் கோயில்கள் தான், மன்னர்கள் கட்டிய கோயில்களில் உள்ள இறைவன், சிவன், அம்பாள், முருகன், விநயாகர்,பெருமாள், சூரியன் போன்ற தெய்வங்கள்தான். பணம், பதவி என்ற வஸ்த்துவிற்காக வெளிநாட்டு கடவுளை ஏற்றுக்கொண்டவர்கள் கூட, இந்துக்களை பிரித்தாளும் நோக்கத்தில் வடஇந்திய கடவுள் தென்னிந்திய கடவுள் என மொழிவாரியாக பிரிவினை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.**



இந்த வரலாற்றின் படிதான் சுத்த தமிழர்களான, தெய்வப் புலவர்கள் திருவள்ளுவர், ஔவையார், கம்பர், இன்னும் பற்பல கவிஞர்கள் இந்து கடவுள்களை குறித்து நன்னெறி போதனைகளை கவிதை, குறள், பொன்மொழி போன்றவற்றை இயற்றியுள்ளனர்.

ஆழ்வார்கள், நாயன்மார்கள், சித்தர்கள், ஞானிகள், மகான்களும் சுத்த தமிழில் பல்வேறு வாழ்வியல் முறைகள், இறை நிலை அடைய பல வழிமுறைகளையும் எடுத்துக் கூறியுள்ளனர்.

பல்வேறு ஓவியர்கள் இறைநிலையை ஓவியங்களாக தீட்டியும், சுதை சிற்பம், கற்சிற்பம், போன்ற வடிவமைத்துள்ளனர்.

நாட்டை ஆண்ட அரசர்கள் கூட இந்து மதத்திற்கான கோவில்கள், மடங்கள், ஆலயங் கள், வழிபாட்டிற்குரிய இடங்களை நிர்மாணித் துள்ளனர்.

ஒரு பக்கம் கல்லையே கடவுளாக வழிபட்டாலும், கடை நிலை என்பது ஒன்றுமல்ல இறைவனை ஆட்கொள்ள அன்பும், பக்தியும், இருந்தால் போதும் என்பதையும் வலியுறுத்தியுமுள்ளனர். ஒருசிலரால் இறைநிலையை அடைய பல்வேறு வழிமுறைகள் கடைபிடிக்கப்பட்டாலும், அது முடிவு அல்ல, என்று பல ஞானிகள் மகான்கள் நிருபித்துள்ளனர்.

வேத, மந்திர தந்திர முறைகள் மட்டுமே இறைவனை அடைய முடியும் என்பது இந்து மதத்தின் கருத்து அல்ல... இதை எந்த தெய்வங்களும் ஏற்றுக்கொள்வதுமில்லை.

மற்றவருக்கு நன்மை செய்தால் அவர்களும் தெய்வங்கள்தான் என்பதை நிருபிக்கும் வகையில் உருவானதுதான் கிராமத்து தெய்வங்கள்.

இந்துமதத்தில் உருவான நாயன்மார்கள், ஆழ்வார்கள், ஞானிகள், சித்தர்கள் போன்றவர்கள் எந்தவித சாஸ்திர சம்பிரதாயத்தையும் கடைபிடிக்கவில்லை, கண்ணப்பர் இறைவனின் முகத்தில் காலை வைத்தார், இறைவன் ஏற்றுக் கொண்டார் காரணம் கண்ணப்பரின் அன்பு.

வசதி வாய்ப்புகளை அனுபவித்து இறை நிலையை யாரும் அடையவில்லை, முற்றும் துறந்து நான், எனது என்ற அகங்காரம் இல்லாமல், அனைத்தும் ஒன்றே என்ற நிலையை அடைந்து, இறைவன் மீது அன்பு செலுத்தியவர்களைதான் இறைவன் ஆட்கொண்டார், அதில் ஒருவர் பட்டினத்தார்.

முற்காலச் சோழர்கள், முதலாம் கரிகாலன், பிற சோழ மன்னர்கள், இடைக்காலச் சோழர்கள், பழையாறை சோழர்கள், அரசநாட்டுச் சோழர்கள், பிற்காலச் சோழர்கள், விஜயாலய சோழன் (கி.பி.850–871), முதலாம் ஆதித்த சோழன் (கி.பி.871–907), முதலாம் பராந்தக சோழன் (கி.பி.907–955), கண்டராதித்த சோழன் (கி.பி.950– 951), அரிஞ்சய சோழன், சுந்தர சோழன் (கி.பி.957–973), உத்தம சோழன் (கி.பி. 970–985), இராசராச சோழன் (கி.பி 985–1014)... இதற்கு பின் வந்த தமிழ் மன்னர்கள் பலர்.

இவர்கள் கட்டியது எல்லாம் இந்துக் கோயில்கள்தான், இவர்கள் கட்டிய கோயில்களில் உள்ள இறைவன், சிவன், அம்பாள், முருகன், விநயாகர், பெருமாள், சூரியன் போன்ற தெய்வங்கள்தான்.

இந்தியாவில் உள்ள மொழிகளான, வங்களம், குஜராத்தி, இந்தி, கன்னடம், காஷ்மீரி, கொங்கணி, மலையாளம், மணிப்புரி, மராத்தி, நேபாளி, ஒரியா, பஞ்சாபி, சமஸ்கிருதம், சிந்தி, தமிழ், தெலுங்கு, உருது, மைதிலி, போடோ, சந்தாளி, தோக்ரி போன்ற 22 மொழிகளும், உட்பிரிவு மொழிகளும் இருந்தாலும், இவர்கள் வணங்குவது அனைத்தும் இந்து தெய்வங்களோடு சம்பந்தப்பட்ட தெய்வங்களைத்தான்.

இந்து மதமும் தெய்வங்களும் எந்த இடத்திலும் பிரிவு இல்லாமல் இருக்கும் போது, தமிழகத்தில் மட்டுமே ஒருசில சுயநலவாதிகள், மாற்று மதத்தைச் சேர்ந்தவர்கள், கடவுள் மறுப்பு கொள்கை கொண்ட தீய சக்திகள் தமிழர் வேறு இந்து மதம் வேறு என்று பொய் பிரசாரம் பரப்புகின்றனர்.

வெளிநாட்டு கடவுளை ஏற்றுக்கொண்டவர்கள் கூட, தாங்கள் நடத்தும் கட்சி, அமைப்புகளுக்கு வெளிநாட்டு நிதியை கருத்தில் கொண்டு தமிழர் வேறு இந்து மதம் வேறு என்ற புதிய யுக்தியை கையில் எடுத்து அலைகின்றனர். இதில் உச்ச கட்டம் ஒருசிலர் இவர்களுக்கு ஆதரவு தந்து சுய சிந்தனையை இழந்து அவர்கள் கூறும் கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்வது முட்டாள் தனத்தின் உச்ச மாக இருக்கின்றது.

இந்து மதத்தையும், இந்து தெய்வங்களையும் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு வகையில் எதிர்த்தும், கோயில்களை சூரையாடியும் உள்ளனர். ஆனால் இந்து மதம் ஆலமரம்போன்று நிலைத்துதான் நிற்கிறது.

தற்போது இந்த அரக்கர்களின் புதிய யுக்திதான் தமிழர் வேறு, இந்து வேறு என்ற வாதம், இதன் உச்சம்தான் தஞ்சை பெரிய கோவிலில் தமிழ் கும்பாபிஷேகம் என்ற வாதம்.

மொழிவாரியாக இறைவனை பிரிக்க முடியாது, அன்பால் மட்டுமே இறைவனை அடைய முடியும் என்பதை இந்த முட்டாள் கூட்டம் தற்போது உணராது, இவர்களின் கண்களை பணம், பதவி என்ற வஸ்த்து மறைத்துள்ளது.

www.aanmeegamalar.com

# வீணையின் வகைகள்

வீணை என்று சொன்னதுமே எல்லோருக்கும் சரஸ்வதியின் நினைவு தான் வரும். ஆனால் 32 வகையான வீணைகளை 31 தெய்வங்கள் இசைப்பதாக புராணங்கள் சொல்கின்றன.

இந்த வீணைகள் முழுவதும் பலா மரத்தால் செய்யப்படுகிறது, தற்போது பைபர் வீணையும் வந்துவிட்டது, ஆனால் மர வீணைக்கு இருக்கும் தனித்துவம் பைபர் வீணைக்கு இல்லை என்பது இந்த வாத்தியம் இசைப்பவர்களின் கருத்தாகும்.

வீணைக்கு தாய்வீடு தஞ்சாவூர், இங்கு பல்வேறு குடும்பங்கள் குலத் தொழிலாகவே செய்து வருகின்றனர், ''ராஜ ராஜ சோழன் ஆட்சிகாலத்துல இருந்தே தஞ்சாவூர்ல வீணை தயாரிப்பு நடந்துவந்ததாகவும், ரகுநாத நாயக்க மன்னர் ஆட்சி காலத்துலதான் உருவாக்கப் பட்டதாகவும் இருவேறு கருத்துக்கள் இருக் கின்றது.

எப்படி இருந்தாலும் இந்த தொழில் பல நூற்றாண்டு பழைமையானது என்பது தெளி வாகிறது.

வீணையில் தயாரிப்பில், ஏகாந்த வீணை, ஒட்டு வீணை என இரண்டு விதமான வகைகள் உண்டு. ஒரே மரத்துல செய்யப்பட்டது, ஏகாந்த வீணை. அதில் மரத்துண்டுகளே இருக்காது. இரண்டு அல்லது மூன்று மரத்துண்டுகளை கொண்டது ஒட்டு வீணை. இதைதவிர, இந்த இரண்டு வீணைக்கும் வேறு எந்த வேறுபாடும் கிடையாது.

வீணையின் மிக முக்கியமான பாகமே, பானைதான். கம்பிகளை மீட்டும்போது, பானை யில் உள்ள துளைகள் வழியாகத்தான் இசை வெளிப்படும்.

பானை, மரத்துல இருந்தாதான் இசை நேர்த்தியா வெளிப்படும். தற்போது விலை குறைந்த வீணைகளை பைபரிலும் செய்யப் படுகிறது.

தஞ்சாவூரில் செய்யப்படும் வீணை 8 கிலோ எடை இருக்கும். இதன் மொத்த நீளம் 52 இஞ்ச். பானையோட அகலம் 15 இஞ்ச். உயரம் 12 இஞ்ச்.

பெரும்பாலும் தயாரிப்பவர்களுக்கு வாசிக்க தெரியாது, கீபோர்டுல எல்லா இசையையும் கொண்டு வந்துட்டாங்க. ஆனா தஞ்சாவூர் வீணையோட இசையை மட்டும் நேர்த்தியா கொண்டு வர முடியலை. அதனாலதான் சினிமா பாடல் பதிவுகளுக்கு நேரடியா தஞ்சாவூர் வீணையை பயன்படுத்துவதாக கூறப்படுகிறது.

வீணை பார்ப்பதற்கு ஒரே மாதிரியாக இருந்தாலும் இதில் பல்வேறு வகைகளில் அழைக்கின்றனர்.

தெய்வங்கள் பல்வேறு சிற்பங்களில் வீணையுடன் காட்சி தரும். இந்த வகை வீணை களை அந்த தெய்வத்தின் திரு நாமத்துடன் தொடர்பு படுத்தி இசைக் கலைஞர்கள் அழைக்கின்றனர்.



அந்த வகையில் வீணை 32 வகையான வீணைகள் இருப்பதாக கூறப்படுகிறது. அந்த 32 வகையான வீணைகளை பார்ப்போம்.

1. பிரம்மதேவனின் வீணை அண்டம்,
2. விஷ்ணு பிண்டகம்,
3. ருத்திரர் சராசுரம்,
4. கவுரி ருத்ரிகை,
5. காளி காந்தாரி,
6. லட்சுமி சாரங்கி,
7. சரஸ்வதி கச்சபி எனும் களாவதி,
8. இந்திரன் சித்தரம்,
9. குபேரன் அதிசித்திரம்,
10. வருணன் கின்னரி,
11. வாயு திக்குச்சிகை யாழ்.
12. அக்கினி கோழாவளி,
13. நமன் அஸ்த கூர்மம்,
14. நிருதி வராளி யாழ்,
15. ஆதிசேடன் விபஞ்சகம்,
16. சந்திரன் சரவீணை,
17. சூரியன் நாவீதம்,
18. வியாழன் வல்லகி யாழ்,
19. சுக்கிரன் வாதினி,
20 நாரதர் மகதி யாழ்,
21. தும்புரு களாவதி (மகதி),
22. விசுவாவசு பிரகரதி,
23. புதன் வித்யாவதி,
24. ரம்பை ஏக வீணை,
25. திலோத்தமை நாராயணி.
26. மேனகை வாணி,
27. ஊர்வசிலகுவாக்ஷி,
28. ஜயந்தன் சதுசும்,
29. ஆஹா, ஊஹூ தேவர்கள் நிர்மதி,
30. சித்திரசேனன் தர்மவதி (கச்சளா)
31. அனுமன் அனுமதம்.

32 வது வகை வீணையை வாசிப்பவன், ராவணன். அவனது வீணையின் பெயர், ராவணாசுரம்.

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

# துவாபரயுகம்
# தீர்க்கதரிசி

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: “பூமியானது ஏற்கனவே கலியுகத்தினூடாக, 1200 வருடகால அளவைக்கொண்ட லோகாயத காலத்தைக் கடந்து விட்டது. எனது குருதேவர் ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வரருடைய கணக்கீடுகளின்படி நாம் 2400 ஆண்டுகளைக் கொண்ட இரண்டாவது யுகமான துவாபர யுகத்தில் ஏறத்தாழ 240 வருடங்களைக் கடந்துள்ளோம். இன்னும் இந்த யுகம் லோகாயதத் தன்மையுடன் தோற்றமளித்தாலும், எண்ணிப்பார்த்தால், தற்போது அதனுடைய ஏறுமுகத்தில் இது மின்யுகமாகும். மனிதன் ஸ்தூல சடப்பொருளை மட்டுமே அறிந்துகொள்வதிலிருந்து அதனுள் உள்ள சக்தியை புரிந்து கொண்டு பயன்படுத்தும்வரை எவ்வாறு வளர்ச்சி அடைந்துள்ளான் என்பதை நீங்களே காணலாம். இந்த கால கட்டத்தில் மனிதன் விஞ்ஞானத்தின் மின்னியல் அல்லது மின்காந்தவியலில் பெரும் முன்னேற்றத்தை அடைவான்.”

“துவாபரயுகம் முன்னேனும்பொழுது நோய்கள் மேன்மேலும் அதிகமாக கதிர்களினால் சிகிச்சை அளிக்கப்பட்டு குணமாக்கப்படும். பொருட்களின் கட்டமைக்கும் திரன்களான அணுக்களின் மின்னணுக் கூறுகளை ஸ்தூல ரசாயனப் பொருட்கள் ஊடுருவ முடியாது. ஆனால் அதிர்வுறும் சக்தியானது ஊடுருவ முடியும். இந்த யுத்தத்திற்குப் பிறகு மின்னியல் விஞ்ஞானத்தில் முன்னேற்றத்தின் மாபெரும் எழுச்சியை நீங்கள் காண்பீர்கள். விமானப்பயணம் கூட மாபெரும் வளர்ச்சியுறும். பயணங்கள் இன்னும் மிகுதியாக ஆகாய வழியில் நிகழும். ஒரு காலத்தில் ரயில் வண்டிகள் அச்சத்துடன் நோக்கப்பட்டதைப்போல் விமானங்கள் இன்னும்கூட பலரால் சந்தேகத்துடன் நோக்கப்படுகிறன்றன. ரயில் வண்டிகள் கிட்டத்தட்ட ஒரு பழைய விஷயமாகிவிட்டன. ஏனெனில் அவற்றின் இடத்தை விமானங்கள் பிடித்து வருகின்றன. போகப்போக மோட்டார் வண்டிகள் கட்டை வண்டிகளாகக் கருதப்படும்.”

“இந்த இரண்டாவது காலத்தின் பிரச்சனை போதுமான பாதுகாப்பின்மை ஆகும். விஞ்ஞானம் இரட்டை வேடம் போடுகிறது. மனிதன் நல்லவற்றை உருவாக்குவதற்கு மட்டுமின்றி அழிப்பதற்கும்கூட விஞ்ஞான முன்னேற்றம் இன்னும் பாதுகாப்பானதாக இல்லை. தற்போதைய உலகப்போர், விஞ்ஞான தொழில்நுட்பம் மனித இனத்தை அழிப்பதற்கு எங்ஙனம் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. இந்தப் போரிலிருந்து மனிதனின் வசதிக்காக அதிகமான விஞ்ஞான ரீதியான உபாயங்களை எவ்வாறு உபயோகப்படுத்துவது என நாம் கற்றுக் கொள்வோம். ஆனால் நாம் ஆன்மீக சக்திகளை வளர்த்துக்கொண்டாலொழிய, நாம் தொடர்ந்து விஞ் ஞான அறிவை அழிவிற்கே உபயோகிப்போம்.”

“இந்த போரிலிருந்து மக்கள் தொழில் நுட்பத்தின் தவறான பயன்பாட்டினால் ஏற்படும் பெருஞ்சேத விளைவுகளை அறிந்துகொள்வர். முதல் உலகப்போரிலும், முற்காலங்களிலும் போரிடுவது வீரப்பண்பாகக் கருதப்பட்டது. ஆனால் வீரப்பண்பு மரபைப் பற்றிய கருத்து மறைந்து விட்டது. இந்தப் போரில் எவரும் போரிட விரும்பவில்லை. இது முடிந்த பின்னர், உலக அழிவைக் குறித்து எந்த அளவு அச்சம் இருக்குமென்றால், எந்தத் தேசமாவது ஒரு போரை துவங்க முயற்சி செய்தால், உலகத்தின் ஏனைய நாடுகள் அந்த நாட்டை தடுத்துவிடும். நான், எதிர்காலத்தில் நடக்க இருப்பதைப்பற்றி கூறிக்கொண்டிருக்கின்றேன்.

“தற்போது போர் தளவாடங்கள் அவசியமானவை. தற்காப்பிற்கான ஒரு திட்டம் நல்லதே. ஆனால் அது முடிவான அமைதியைக் கொணராது, எவரேனும் ஒருவர் மிருக பலத்தை பயன்படுத்தும் காலம்வரை வேறு எவரேனும் ஒருவர் எப்பொழுதும் அதைவிட அதிகமான மிருகபலத்தை உடையவராக இருப்பார். நீங்கள் வாளை பயன்படுத்தினால், நீங்கள் வாளினாலேயே அழிவீர்கள் என்றார் ஒரு மகான் . மகான்களின் நிரந்தரச் செய்தி, ஆன்மீக சக்தியினால் மட்டுமே போர்கள் நிறுத்தப்பட முடியும். இதனை மனித இனம் புரிந்துகொள்ளச் செய்வது தான் மிருக பலத்தைப் பணியச் செய்வதற்கான ஒரே வழி.”

“பரஸ்பர ஒப்பந்தத்தின் மூலமாக உலகின் எல்லா தேசங்களும் தொடர்ந்து அமைதி மாநாடுகளை

75
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக



நடத்தும்பொழுதும் தம்முடைய ஆயுதங்களை அழித்து அதற்குப்பதிலாக உலகின் சேரிப்பகுதிகளை ஒழிப்பதற்கு உதவும்பொழுதும் முடிவான அமைதி கிட்டும். அனைத்து நாடுகளும் அவற்றின் தலைவர்களும் போரில் செலவழித்துக்கொண்டிருக்கின்ற செல்வத்தை உலகத்தின் ஏழ்மையை ஒழிப்பதற்குப் பயன்படுத்துவதற்காக ஒன்றுகூடினால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்பதைச் சிந்தியுங்கள். மாறாக போர் முடிந்து ஒரு தேசம் மற்றொன்றிடம் சரணடைந்தபொழுதும்கூட மக்கள் பயத்தில் வாழ்வதைத் தொடர்வர். மேலும் ஏழ்மை அதிகரிக்கும். தற்போதைய போர் தளவாடங்கள் அழிக்கப்பட்டவைகளாகிவிடும். மேலும் கோடிக்கணக்கான பணம் வீணடிக்கப்பட்டுவிடும். மிருக பலத்தை நம்புவதன் மூலம், மனிதன் பெரும் தவறான செயலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறான். இது எவ்வளவு காலம் வரை செல்லும்? இதை எவ்வாறு மாற்ற முடியும்? தேசங்களுடைய மூளைகள் போரினால் தகர்க்கப்பட்டுவிட்டபொழுதுதான் அவை தம்முடைய குறுகிய நோக்குத்தன்மையை புரிந்துகொள்ளத் துவங்கும். இந்தப் போரானது, அடக்கிவைக்கப்பட்டுள்ள அனைத்து நாடுகளின் விடுதலைக்காக, இது அவ்வாறு தோன்றவில்லை என்றாலும்கூட போரிடப்பட்டுக்கொண்டிருக்கிறது என்று நான் உங்களுக்குக் கூறுகிறேன். கர்மவினை சக்திகள், இந்தியாவிற்கும் அன்னிய ஆதிக்கத்தைக்கொண்டுள்ள பிறநாடுகளுக்கும் சுதந்திரத்தை வழங்குவதற்காக செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன.”

போர் செய்யக்கூடாது என்று குருதேவர் கூறுகிறார். ஆனால் ஏதற்கெடுத்தாலும் போர்தான் நடக்கிறது. விஞ்ஞானம் வளருகிறது; அதை சரியான முறையில் பயன்படுத்தாமல் அழிவிற்காக பயன்படுத்துகிறார்கள் என்று அவர் கூறுகிறார். இன்றைய விஞ்ஞான உலகம் அழிப்பதற்கென்றே பிறந்துள்ளது. அதை யார் தடுப்பார்? ஆனால் அதற்குமேல் பஞ்ச பூதங்களால் ஏற்படும் அழிவை யாராலும் தடுக்க இயலாது. அந்த அழிவிற்குள்ளாகிறவர்கள் உலகத்தை விஞ்ஞான சக்தியால் அழிக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் செய்த வினைகளின் விளைவேயாகின்றன. பிற ஜீவன்களுக்குக் கொடுக்கும் தொல்லைகளினால் அழிவு ஏற்படுகிறது. பரஸ்பரம் நன்மைகளைச் செய்பவர்களுக்கு பஞ்ச பூதங்கள் ஆதரவாக இருக்கும் என்பர். அதுதான் உண்மை. இறைவன் எதிர்பார்ப்பதும் அதுவேதான். புலன்களை அடக்கியவர்களுக்கு பயமில்லை. அவர்கள் உலகத்தையோ உலகப் பொருட்களையோ மனதால்கூட தொடுவதில்லை. இந்த நிலை வந்தாலே இறைவனை நெருங்கிவிட்டார்கள் எனக் கூறவேண்டும். புலன்களை அடக்கியவர்கள் எப்பொழுதும் ‘‘இறைவா, இறைவா’’ என்று சிந்தனை செய்துகொண்டிருப்பார்கள். புலனடக்கம் செய்தவர்களுக்கு ஆசைகள் ஏதுமில்லை. அவர்கள் இவ்வுலகில் நிகழும் எந்த நிகழ்வுகளுக்கும் மனதில் இடம் கொடாமல் வாழுவர். சதா இறைவனின் நினைவில் வாழுவர். ஆசைகளும் பற்றும் இல்லையேல் புலன்களினால் தொல்லையில்லை. இந்நிலையை அடைந்த ஒருவர் எப்படியிருப்பார் என்பதை பகவத் கீதை அத்தியாயம் 6 ஸ்லோகம் 28 விளக்குகிறது.

யுஞ்ஜன்னேவம் ஸதாத்மானம் யோகீ
விகதகல்மஷ:
ஸுகேன ப்ரஹ்மஸம்ஸ்பர் சமத்யந்தம்
ஸுகமச்நுதே.



முன்னர் செய்த சாதனைகளினால் மனம், சித்தம், புத்தி இவை தேவையான அளவு சுத்தமானால் அவை அடங்கியபின்னர் இறைவனை (பரம்பொருளை) தடையின்றி நினைக்கத் தொடங்குவர். அதன்பின்னர் இடைவிடாமல் செய்யச்செய்ய அந்த யோகிக்கு காலப்போக்கில் அனைத்து அழுக்குகளும் அற்று சித்த சுத்தி கிடைக்கப்பெறுகிறது. அப்பொழுது பிரம்மத்தின் நெருக்கம் எளிதில் கிடைக்கிறது. அதனால் பிரம்மத்தன்மை ஒளிர்ந்து ஜீவதன்மை அடங்கும்போது மிகுந்த இறை அனுபூதி உண்டாகிறது.

இவ்வாறு இறைவனை அடையவேண்டும் என்ற குறிக்கோளுடன் வைராக்கியமாக இருந்து சாதனை செய்யத்தான் வேண்டும். இல்லையேல் பிறப்பும் இறப்பும் அத்துடன் எல்லா உலக அழுக்குகளுடன் ஆத்மா சிக்கி சரீரமாகின்ற கூட்டில் துன்பங்களாகின்ற நரகத்தில் கிடக்கத்தான் வேண்டும். ஆத்மாவை இந்த நரகத்திலிருந்து மீட்டுக்கொள்வது ஒவ்வொருவரின் கடமையாகும். ஆத்மாவை அழிவற்றது என்றும் உலகம் அழிவுற்றது என்றும் உள்ள விவேகம் வரும்வரை இந்த வாழ்க்கை நரகம் தான். உண்மையை உணர்ந்தபின்னர் உள்ள வாழ்க்கை சுவர்க்கம்தான். இந்த சரீரத்தை வைத்துக்கொண்டுதான் இறைவனை அடைய வேண்டும். அதற்காகத்தான் இறைவன் இந்த சரீரத்தை நமக்கு அருளி வழங்கியிருக்கிறான். மாறாக உலகத்தையும் உலகப்பொருட்களையும் அனுப்விப்பதற்காக அல்ல. அந்த உண்மையை யார் யார் உணர்கி றார்களோ அவர்களுக்கு எளிதில் சம்சார வாழ்க்கை நிறைவு பெறும்; அதிலிருந்து விடுதலை பெறுவர்.

மீண்டும் மலரும்... குருப்ரியா (வசுமதி)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# கூடுவிட்டு கூடு பாய்தல்

சின்ன வயதில் மாயாஜால கதைகளில் படித்திருக்கிறோம். பழைய தெலுங்கு சினிமாக்களில் பார்த்து வியந்திருக்கிறோம். அப்போதெல்லாம், நமக்கும் அப்படியொரு வாய்ப்பு அமைந்தால் நமது உடம்பை விட்டு விட்டு வண்ணத்து பூச்சி உடம்பில் விண்ணைத் தொட்டு, பறக்கும் கருடனின் உடம்பில் புகுந்து உலகம் முழுவதையும் பார்ப்பதற்கு ரசிப்பதற்கு ஆசை பட்டிருக்கிறோம்.

சிறிது வயது வந்த பிறகு, அறிவு வளர்ந்த பிறகு, கூடு விட்டு கூடு பாயும் வித்தை என்பது இந்தா பிடி வைத்துக் கொள் என்று யாரும் தந்து விடுகிற பொம்மை அல்ல. அதற்கு இறைவனின் அருள் வேண்டும். கடினமான பயிற்சிகள் வேண்டும் என்று அறிந்திருக்கிறோம். அப்போது கூட எதையுமே நம்பாத நாத்திகர்களின் வாதங்களால் மயக்கம் அடைந்து, ஒரு வேளை இந்த வித்தைகள் அனைத்தும் தனிப்பட்ட மனிதர்களை, விஸ்வரூபமாக காட்டும் கற்பனை தந்திரமோ என்று நினைத்து குழம்பி இருக்கிறோம். எது எப்படி இருந்தாலும் கூடு விட்டு கூடு பாயும் கலையிலுள்ள ஆர்வம் எல்லா காலத்திலும் நம்மை தொடர்ந்தே வந்திருக்கிறது.

சித்தர்களின் தலைவரான திருமூலர், மாடு மேய்க்கும் ஆயர் குல இளைஞன் ஒருவனின் உடம்பிற்குள் புகுந்து, அவனது பசு கூட்டத்திற்கு ஆறுதல் அளித்துவிட்டு அவனது உடம்பிலேயே தங்கி திருமந்திரம் என்ற உயரிய நூலை படைத்த கதை நமக்கு தெரியும். அருணகிரிநாதரும், கிளி வடிவம் எடுத்து, கோபுரத்தில் தங்கி இருந்ததையும் நமக்கு பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதிலிருந்து அடிப்படையான ஒரு கேள்வி நமக்கு எழுகிறது. கூடு விட்டு கூடு பாய்தல் எப்படி நடக்கிறது. ஏன் நடக்கிறது? என்பதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். கூடு விட்டு கூடு பாய்வதனால் ஏற்படும் நன்மைகள் என்ன? என்பதை அறிந்து கொள்ள ஆர்வம் தோன்றி அதைப் பற்றி நமது குருஜியிடம் கேட்டோம்.

பகவத் கீதையில் கண்ணபெருமான் பயன் கருதாமல் செயல்களை செய் என்று சொன்னார். ஆனால் மனிதர்களான நமக்கு இறைவனின் கட்டளைப்படி நடக்க மிகவும் சிரமாக இருக்கிறது. நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களாக இருக்கட்டும். பெரிய ஞானிகளாக இருக்கட்டும் எதையாவது ஒன்றை எதிர்பார்க்காமல் எதையும் செய்ய முடிவதில்லை. நாம், நமது செயலால் நமக்கென்ன விளைகிறது என்று பார்ப்போம். ஞானிகள் அப்படி பார்க்கவில்லை என்றாலும், நன்மை என்ற ஒன்றாவது அவர்களது நோக்கமாக இருக்கிறது.

ஞானிகள் விரும்புவது என்ன? எப்படியாவது விரைவில் இறைவனின் பாதார விந்தங்களில் ஐக்கியமாக வேண்டும் என்பது தான். அதற்கு இடையறாத தியானமும், தவமும், ஜெபமும் வேண்டும். சில சமயம் நாம் பெற்றிருக்கின்ற இந்த உடம்பால் அவைகளை முழுமையாக நிறைவேற்ற முடியாமல் தவிப்பு ஏற்படுகிறது. இந்த பிறவியில் நாம், நமது முக்திக்கான மார்க்கத்தை தேடவில்லை என்றால் அடுத்த பிறவியை எதிர்கொள்ள வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்படும். எனவே, பிறப்பை தடுப்பதற்கு முடிந்தால் இந்த உடம்பிலிருந்து ஆவியை விடுவித்துக் கொண்டு இன்னொரு உடம்பிற்குள் பிரவேசம் செய்து, அங்கே உட்கார்ந்து தனது தியானம், தவம் போன்றவற்றை முடித்து கொள்ள முனிவர்கள் விரும்பியதனால் தான் அரும்பாடுபட்டு கூடு விட்டு கூடு பாயும் பரகாயப் பிரவேசம் என்ற கலையை கண்டுபிடித்தார்கள்.

ஒரு பாம்பின் உடம்பில், திடகாத்திரமான ஒரு இளைஞனின் உடம்பில் அல்லது காடுகளுக்குள் அதிக பசி, தாகம் இல்லாமல் இருக்க கூடிய ஏதாவது ஒரு ஜீவனின் உடம்பில் புகுந்து கொண்டால் யாருடைய தொந்தரவு இல்லாமல், உடல் சோர்வும் இல்லாமல் தவம் செய்யலாம். தொடர்ச்சியான பீரங்கி தாக்குதல் அசைக்க முடியாத கற்கோட்டையையும் அடித்து வீழ்த்தி விடுவது போல, நமது தொடர் தவமும் முக்தியை நோக்கி நம்மை அழைத்து சென்று விடும். அதற்கு உடம்பு தடையாக இருந்தால் அதை விலக்குவதில் ஞானிகளுக்கு ஆட்சேபனை கிடையாது.

பரகாயப் பிரவேசம் எதற்காக நடத்தப்படுகிறது என்பது நமக்கு புரிகிறது. அது எப்படி நடக்கிறது என்ற அடுத்த கேள்வி நமக்கு எழுவதை தவிர்க்க இயல வில்லை. அதை அறிந்து கொண்ட குருஜி தெளிவாக விளக்கம் சொல்ல துவங்கினார்.




உயிர் என்பது மூலாதாரத்தில் இருக்கின்ற ஒரு வித சப்தம் அல்லது நாதம் அல்லது அதிர்வு என்று சொல்லலாம். இதை படிப்படியாக மேலே எழும்ப செய்து கபாலம் வரையில் அதாவது சகஸ்ரம் வரையில் கொண்டு செல்ல உதவுவது குண்டலினி பயிற்சி. இந்த குண்டலினி பயிற்சியை இன்னும் தீவிரப் படுத்தினால் நாம் விரும்புகிறப்படி உடம்பில் எந்த பகுதிக்கு வேண்டுமென்றாலும் உயிர் சக்தியை கொண்டு செல்லலாம். உடம்பிற்கு வெளியேயும் அதை எடுத்து செல்ல முடியும்.

அப்படி எடுத்து செல்வது தான் இந்த கலையின் அரிச்சுவடியாகும். எடுத்து செல்லப்படும் உயிர், வேறொரு உயிர் இல்லாத சடலத்திற்குள் புகுத்தப்படும் போது அந்த சடலம் உயிர் பித்து விடுகிறது. இப்போது உயிரும், மனதும் நாமாகவும், உடம்பு மட்டும் வேறாகவும் இருக்கிறது. உண்மையில் நமது பிறப்பின் இரகசியமே இது தான். நமது உயிர்





www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

காலம் காலமாக பயணப்பட்டுக் கொண்டே வருகிறது. வருகிற வழியில் எத்தனையோ சரீரங்களில் தங்கியும் வருகிறது. இதை நாம் அறிவதில்லை. கூடு விட்டு கூடு பாயும் வித்தையில் நிதர்சனமாக அறிந்து கொள்கிறோம்.

குருஜி கூறுவதை ஒரு நிமிடம் யோசித்துப் பார்த்தால் விந்தையாகவும் இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது. நான் இராணியின் புருஷன் என் உயிரை வேணியின் புருஷன் உடம்பில் செலுத்தி விடுகிறேன். இப்போது நான் மனதால் ராணியின் புருஷனாக இருந்தாலும், உடம்பால் வேறொருத்தியின் புருஷனாவேன். இந்த தர்ம சங்கடத்தை எப்படி நான் வெளிப் படுத்துவது. என் மன நெருக்கடியிலிருந்து எப்படி நான் விடுபடுவது? யோசித்தாலே இதயம் நின்றுவிடுவது போலிருக்கிறது. இதை குருஜி யிடம் வெளிப்படுதினேன். அதற்கு அவர் கட கடவென சிரித்தார்.

இது பரவாயில்லை. ஜலதோஷம் பிடித்தது என்று வைத்துக் கொள். நான் சீந்தி (வெளி யேற்றுவது) போடுவது வேறொருவன் சளியை. நான் விழுங்குவது கூட இன்னொருவன் எச்சிலை. இப்படி யோசித்துக் கொண்டே போனால் கூடு விட்டு கூடு பாய்வதில் உள்ள ஆர்வம் முற்றிலுமாக குறைந்து போய்விடும். அதனால் தான் பல ஞானி கள் வீணான, மன நெருக்கடியை தவிர்க்க இந்த வித்தையை அதிகமாக



பயன்படுத்தாமல் இருந்தார்கள் என்று நினைக்கிறன் என்று எங்களுக்கு பதில் சொல்லிவிட்டு பொதுவாக இந்த வித்தைகள் உடலை பிரதானமாக கருதுபவர்களால் செய்ய இயலாது. உடம்பை தாண்டி சிந்திப்பவர்களால் மட்டுமே இது இயலும். அதனால் இந்த நெருக்கடி என்று நாம் பேசுவது வீண் பேச்சு என்று நான் கருதுகிறேன். என்று அந்த விஷயத்திற்கு குருஜி முற்றுப்புள்ளி வைத்தார்.

எங்கள் ஆர்வம் அத்தோடு நிற்கவில்லை. மீண்டும் சில கேள்விகள் தோன்றின. குருஜி, ஒருவர் கூடு விட்டு கூடு பாயும் போது, அவரது சொந்த உடலுக்கு எதாவது தீங்கு ஏற்பட்டு விட்டால் மீண்டும் பழையபடி வரமுடியுமா? என்று கேட்டோம். நன்றாக புரிந்து கொள்ளுங்கள். ஒரு உடம்பில் ஒரு நேரத்தில் ஒரு உயிரால் மட்டும் தான் முழுவதுமாக வாழ முடியும். இரண்டு உயிர்கள் ஒரு உடம்பில் இருக்க இயலாது. அதே போல இரண்டு உடம்பில் ஒரு உயிரால் இருக்க வும் இயலாது. உடம்பு ஒன்று என்றால் உயிரும் ஒன்று தான். வேறொரு உடம்பில் வாழுகிற காலத்தில் நமது உடம்பிற்கு அழிவு ஏற்பட்டு விட்டால் ஒன்று புதிய உடம்பிலேயே வாழ்ந்தாக வேண்டும் அல்லது அதையும் விட்டு விட்டு ஆவி உலக வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். இதை தவிர வேறு மார்க்கமே கிடையாது.

பரகாயப் பிரவேசம் செய்வதில் நிறைய சிக்கல்கள் இருக்கிறது. பழைய உடம்பு பாதுகாக்கப்பட வேண்டும். எந்த இயற்கை சீற்றமும் அதை பாதித்து விட கூடாது என்பதோடு மட்டுமல்ல. நமது உடம்பில் உள்ள உயிரை எடுத்து இன்னொரு உடம்பில் வைக்கின்ற போது நமது பழைய உடம்பு என்ன நிலையில் கிடக்கிறதோ அதே நிலையில் இருந்தால் தான் மீண்டும் இங்கே வரமுடியும். யாரவது கை கால்களை நகர்த்தி வைத்தால் கூட உயிர் உடம்பிற்குள் இறங்குவதில் இடர்பாடு ஏற்பட்டு விடும்?

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434







# பிரதோஷ காலத்தில் சிவனுக்குகந்த பெயர்கள்

அனைத்து சிவாலயங்களிலும் பக்தர்களின் தோஷத்தை நிவர்த்தி செய்து வைக்கும், மிகப் பெரும் தோஷ நிவர்த்தி பூஜையாக கொண் டாடப்படுவது பிரதோஷ பூஜையாகும். இந்த தினத்தில் சிவபெருமான் குறிப்பிட்ட காலத்தில் மக்களின் ஒருசில செய்கையால் விளைந்த பாவங்களை போக்கி அருளுகிறார்.

அந்த புனித வேளையில் மக்கள் சிவனை வழிபட பல்வேறு வழிமுறைகள் உள்ளன. அந்த வழிமுறைகளில் ஒன்றுதான் சிவனின் முக்கிய 11 பெயர்களால் அவரை வணங்கும் சிவ வழி பாடாகும்.

1. பவன், 2. ருத்திரன், 3. மிருடன், 4. ஈசானன், 5.தானு, 6. சம்பு, 7. சருவன், 8. உக்கிரன், 9. பர்க்கன், 10. பரமேஸ்வரன், 11.மகாதேவன் ஆகிய திருநாமங்களில் சிவனை பிரதோஷ தினத்தில் துதித்து வழிபட்டால் மிக அற்புதமான பலன்களை பெறலாம். மேற்கண்ட ஒவ்வொரு பெயருக்கும் உள்ள சிறப்பை பார்ப்போம்.

1. பவன்: பிரதோஷ காலத்தில் சிவனை வேண்டிக் கொள்ளும் போது பவனே என்னைக் காப்பாற்று என்று வேண்டிக் கொள்ளுதல் வேண்டும். எல்லாவற்றையும் தன்னிடமிருந்து தோற்றுவிப்பவன் சிவனே. இதுவே பவன் என்ற பெயரின் பொருளாகும். ஒரு குருவை சீடன் இதற்கு விளக்கம் கேட்டான். தங்கம், வெள்ளி, முத்து, பவளம், வைரம், ரத்தினம், நீலம், புஷ்பராகம், வைடூரியம் இவைகள் எங்கே கிடைக்கின்றன? என்று குரு கேட்டார். அதற்கு அந்த சீடன் பூமியில்தான் என்றான். நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம் எங்கே தோன்றுகிறது? பிறப்பு, மரணம் எங்கே நடைபெறுகிறது? என்று குரு கேட்டார். அதற்கு அந்த சீடன் எல்லாம் பவனே அனைத்தும் அங்கிருந்தே வருகறது என்றான். ஆகவே பிரதோஷ தினத்தில் பவனை வணங்கினால் பாவம் தொலைந்து நல்லது நடக்கும்.

2. ருத்ரன்: இது சிவபெருமானின் இரண் டாவது பெயராகும். ருத்ரன் என்ற பெயர் மிகவும் சிறப்பானதாகும். பிரதோஷ காலத்தில் பக்தர்கள் ருத்ரனின் பெயரைச் சொல்லி வணங்க வேண்ம். பிறப்பு ஒரு நோய் என்றார் தத்தாத்ரேயர், பிறந்த பின்பும் உடம்புக்கு நோய் வருகிறது. பந்தம், பாசம், இவைகளால் மனிதன் ஆண்டவனை மறக்கிறான். அதனால் பந்த பாசம் ஒரு நோயே என்றார் தத்தாத்ரேயர். கோபம், பொறாமை, காமம் அனைவரையும் வாட்டுகின்ற ஒரு பெரிய நோய். இதனால் பிறப்பு இறப்பு நோய்களை போக்கும் சக்தி ருத்ரனுக்கு உண்டு. பிரதோஷ காலத்தில் ருத்திரனை வழிபட்டால் குற்றங்கள் எல்லாம் மனித சிந்தனையிலிருந்து மறையும்.

3. மிருடன்: இது சிவபெருமானின் மூன்றா வது சிறப்பு பெயராகும். எல்லோரையும் சுகம் அடையச் செய்து உரிய இடத்தில் சேரும்படிச் செய்பவன் சிவபெருமானே இதுவே மிருடன் என்ற பெயரின் பொருளாகும். பிரதோஷ காலத் தில் பக்தர்கள் மிருடனே சுகம் கொடு என்று கேட்டால் துன்பத்தைப் போக்கி விடுவான் இதுவே மிருடன் தரும் பலன் ஆகும்.

4. ஈசானன்: சிவபெருமானின் நான்காவது தோற்றம் ஈசானன். ஆங்கிலத்தில் கார்னர் என்றால் மூலை என்று பெயர். எந்த இடத்தில் அமர்ந்து கொண்டால் நீ புகழ் அடைவாய் என்று யோசி அந்த இடத்தில் சென்று அமர்ந்து கொள் அதுவே ஈசான்ய மூலை ஆகிவிடும் என்கிறார் சிவன். சிவலிங்கங்கள் இருக்கின்ற இடங்களெல்லாம் ஈசான்ய மூலைகளே. கடவுள் எல்லா இடங்களிலும் வைத்து மனிதன் புகழ் கொடி நாட்ட வேண்டும். இதுவே இதன் கருத்தாகும். சிவனை வழிபட்டு இதை அடை யுங்கள் தனக்கு மேற் பட்டோர் ஒருவரும் இல்லா தவன் இதுவே ஈசானன் என்ற சொல்லின் கருத்தாகும்.

5.தானு: இது சிவபெருமானின் ஐந்தா வது பெயர். சிறிது அசைவின்றி நிலை பெற்றிருப்பவன் தானு என்ற பெயரின் பொருள் இதுவே தானுலிங்கம் என்றும் சிவதானு என்றும் சிவனுக்குப் பெயருண்டு பக்தியுடன் சிவனை ஓரிடத்தில் வைத்தாலும், பக்தியின்றி சிவனை ஓரிடத்தில் வைத்தாலும் கடவுள் அங்கேயே நிலைத்து விடுவார். அவனை அசைக்க முடியாது. பக்தர்களே, பிரதோஷகாலத்தில் நீங்களும் தானுலிங்கத்தை வழிபட்டு வெற்றி பெறுங்கள்.



6. சம்பு: சம்பு சிவபெருமானின் ஆறாவது திருஉருவமாகும். இப்பெயர் ஞான மூர்த்தியாக விளங்கிய முருகனுக்கு ஒரு தனிச் சிறப்பினைத் தந்தது. சம்பு என்ற கடவுள் உயர்வு அடைவதற்குத் தேவையான பொருளை அனைவருக்கும் உடனே தருவார். அதனால் சிவனுக்கு சம்புப் பிரசாத் என்றும் பெயருண்டு. சம்பு மகாதேவன் என்பது சம்போ மகாதேவா என்று ஆகியது. சம்போ மகாதேவா என்று ஒரு முறை கூவ அழைத்தால் விவபெருமான் மனிதனுக்கு எல்லாத் துறைகளிலும் உடனே உயர்வினை தருவார்.

7. சருவன்: சருவன் என்பது சிவபெருமா னின் ஏழாவது பெயராகும். இப்பெயரைச் சொல்லி இத்திருவுருவத்தைப் பிரதோஷ வேளையில் வழிபட வேண்டும். வழிபட்டால் உலகத்திற்கு மிகப் பெரிய நன்மை விளையும். சருவன் என்றால் கொடியவர்களைத் தண்டித்துக் கொள்பவன் என்று பொருள். மிக கொடியவர்களை சிவபெருமான் தண்டித்து மக்களை காக்கிறார்.

8. உக்கிரன்: இது சிவபெருமானின் பதினொரு திருஉருவங்களில் எட்டாவது உருவத்தின் பெயராகும். எண் தோள் வீசி ஆடும் சிவபெருமானின் பதினொரு திருஉருவங்களுக்கு ஏகாதச ருத்திரங்கன் என்று பெயர். உக்கிரன் என்றால் எதிலும் நின்று ஆட்சி செய்பவன் என்று பெயர் ஆட்சியாளன் என்று பெயருண்டு. இவ்வுக்கிரன் பூஜை செய்தவுடன் உடனே மகிழ்வார். அதேபோல் தவறு செய்தவுடன் உடனே கோபிப்பான்.

9. பர்க்கன்: பர்க்கன் இது சிவபெருமானின் ஒன்பதாவது அவதாரம் அப்பொழுது ஒரு சிறப்பான உருவம் அவருக்குக் கிடைக்கிறது உலகில் எல்லா துறைகளிலும் தகராறுகள் வரும். தவறுகள் வரும். தவறு இழைப்பதனால் இவைகள் வருவதில்லை. அனைத்துமே அறியாமையினால் நிகழ்கின்றன. அறியாமையைப் போக்கி எல்லா உயிர்களையும், அறிவு உள்ளவர்களாய் ஆக்குவதே பர்க்கன் என்ற கடவுளின் வேலையாகும்.

10. பரமேஸ்வரன்: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் ஒரே சமயத்தில் செய்கின்ற சிவபெருமானுக்கு பரமேஸ்வரன் என்று பெயர். இது இறைவனுக்குக் கிடைத்த பத்தாவது திருநாமமாகும். இச் சமயத்தில் இறைவன் முழு மகிழ்ச்சி அடைந்து கூத்தாடினான். அப்பொழுதே அவனுக்கு நடராஜன் என்ற காரணப் பெயர் ஏற்பட்டது.

இவனது திருக்கோயில் சிதம்பரம். பிரதோஷ கால பூஜையில் ஒருநாள் அனைவரும் நடராஜனை வழிபடுதல் வேண்டும். பரமேஸ்வரன் சிந்தனை உள்ளவர்களே நாட்டியம் ஆடுவார்கள். பற்பல அபிநயங்களைப் பிடித்துக் காட்டுவார்கள் நடராஜனின் உருவம் இதுவே என்பதை அறியுங்கள். சிவன் கோயிலில் இருக்கின்ற மற்ற உருவங்கள் எல்லாம் பூஜை செய்து வழிபடும் உருவங்கள். அங்கு நடராஜப் பெருமான் ஒருவனே நித்திய தரிசனத்திற்குரிய கடவுள். காரணம் நூற்றுக்கு நூறு தொழிலில், வேலையில் வல்லவர்களே நாடு தரிசிக்க விரும்பும்.

11. மகாதேவன்: சிவபெருமானுக்கு ஒரு ஒளிமயமான திருவுருவம் திடீரென்று ஏற்பட்டது. இது பக்தர்களுக்காகத் தோன்றிய ஒரு அற்புதத் தோற்றம் ஆகும். இது இறைவனின் பதினொன்றாம் பெயராகும். எல்லையில்லாத பேரொளியுடன் அமர்ந்து இருந்தார் சிவபெருமான் இதுவே மகாதேவன் என்ற பெயரின் பொருள். ஹர ஹர மகாதேவா என்றால் எத்திசையிலும் இப்பேரொளி எல்லையில்லாமல் இருக்கும். தற்காகவே மகாதேவன் தோன்றினார். ஒளிக்கு பின் பக்தன் விரும்பினால் தனது உருவத்தையும் காட்டுவார். சிவபெருமானிடம் இருட்டைக் காண முடியாது.

பிரதோஷ பூஜையின் போது சிவபெருமான் பதினொரு வடிவங்களை எடுக்கிறார். பிரதோஷ பூஜையின்போது மேற்கண்ட பதினொரு வடிவங்களையும் நாம் நினைத்து வழிபட்டால் நம்முடைய பாவங்கள் விலகி சிவபெருமானின் அருள் கிடைத்து வாழ்க்கையில் முன்னேற முடியும் என்பது நிதர்சனமான உண்மை.

ஸ்ரீ அம்பாள் உபாசகர்
A.R.R.சுதர்ஸன ஐயங்கார்
செல்: 9840369513


ஆன்மிகமலர் மெயில் புக்
1-15 பிப்ரவரி 2020 31
www.aanmeegamalar.com

# தை பூசம்

இப்பூமியில் சக்தியின் வெளிப்பாடும் ,தெய்வீகமும் பொருந்திய காலம் தை மாதம் ஆகும். இம்மாதத்தில் சூரியன் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வருகிறது. இந்த தைப்பூச தினத்தை அருட்பெருஞ்சோதி சித்திக்குரிய தினம் தேவர்களின் விருப்பத்திற்கேற்ப அருள் மிகு நடராசர், தன் சக்தியுடன் திரு நடன காட் சியை காட்டிய நாள். எனவே சிவாலயங் களில் விழாக்கோலம். குறிப்பாக சிதம்பரத்தில் மிக விசேஷம் .

தை மாதப் பூச நட்சத்திரத்தில் வரும் உற்சவம் மிக முக்கியமாய்க் கருதப்படுகிறது. ஆடல்வல்லான் தன் ஆனந்தத் தாண்டவத்தைச் சித் சபையில் இந்த பூசத்தில் நடத்தியதாய்ச் சொல்லப்படுகிறது. இந்தத் திருவிழாவில் முக்கிய நிகழ்ச்சியாக, பதஞ்சலி, வியாக்ரபாதர் இருவருக்கும் இறைவன் தன் நாட்டியத்தைக் காட்டி முக்தி கொடுத்ததாய்க் கூறப்படுகிறது.

முதன் முதல் தில்லைப் பதியில் "கனகசபை" அமைத்து இறைவன் ஆனந்தத் தாண்டவம் ஆடியதும் தைப்பூச நன்னாளில் தான் என்று சொல்லப்படுகிறது. சிவனுக்கே உரிய "சூல விரதம்" அன்று சிறப்பித்துச் சொல்லப் பட்டாலும், அது தற்சமயம் அவர்தம் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய சிவனின் அம்சம் ஆன சுப்ரமணியருக்கு உரிய நாளாக மாறி இருக்கிறது. அன்று இறை அவனுக்கு அன்னப் பாவாடை சார்த்திப் பின்னர் அது பக்தர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும்.

குறிப்பாக சிதம்பரத்தில் மிக விசேஷம் சிதம் பரத்தில் சிவகங்கை குளத்திலே, தீர்த்தவாரிக்கு பிறகு, இறைவன் உலா வரும் நிகழ்வு. பின் அன்னப் பாவடை என அளவில்லா அன்னம் இறைவனுக்கு படைத்தபின் வந்த பக்தர்களுக்கு வாரி வரி வழங்குதல் நடை பெறும்.

இந்த தினத்தில்தான் முருகன் வள்ளியை மணந்த நாள், எனவே திருத்தணியில் இன்று மணக்கோலத்துடன் காட்சி தருவார். பழனி யிலோ சுமார் ஒரு வாரமாக பக்தர்களின் நடை பயணம் நடக்கும். இந்த பாத யாத்திரை தற் போது ஆண்டுக்கு ஆண்டு பெருகி வருகிறது.

பழனிசாலையெங்கும் சாரை சாரையாக மக்கள் பழனி முருகனை வேண்டிக் கொண்டு நடப்பதும், கேரளா போன்ற வெளி மாநில மக்கள் முருகனை நாடி வருவதும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

27 நட்சத்திரங்களில் பூசம் நட்சத்திரத்தின் அதி தேவதையாக நவகிரகங்களில் சுப கிரகமாக குரு பகவான் இருக்கிறார்.

தந்தையான சிவபெருமானுக்கு அவரின் மகன் முருகன் பிரணவ மந்திர பொருளை உபதேசித்து சிவகுருநாதன் என்கிற பெயரை பெற்று குரு ஸ்தானம் பெற்றார்.

எனவே இந்த தினத்தில் முருகப்பெருமானை வணங்குபவர்களுக்கு முருகன் மற்றும் குரு பகவானின் அருள் கிடைத்து, தொட்டே காரியங்கள் அனைத்து பொன்னாகும் அற்புதம் ஏற்படும். திருமண சம்பந்த பேச்சு, புதிய தொழில் வியாபார ஒப்பந்தங்கள் போன்றவற்றை இந்த தை பூச நன்னாளில் சிவபெருமான், முருகனை வணங்கி தொடங்கினால் அவை நிச்சயமான வெற்றி பெற்று நன்மைகளை தரும். இந்த தை பூச நாளில்தான் வள்ளியை முருகன் மணமுடித்ததாக கூறப்படுகிறது.

## சிவ விரதம்

தை பூசம் தினத்தன்று அதிகாலை எழுந்து குளித்து முடித்ததும், சிவபெருமானை மனதில் நினைத்தவாறு நெற்றியில் விபூதி பூசிக்கொண்டு, ருத்ராட்சம் அணிந்து, தேவாரம், திருவாசகம் போன்றவற்றை படித்து சிவபெருமானை வழிபடுவது சாலச் சிறந்ததாகும்.



## முருகனுக்கு விரதம்

தை பூச தினத்தில் முருகனை வழிபட விரும்புபவர்கள் காலை முதல் மாலை வரை உணவு ஏதும் உட்கொள்ளாமல் விரதம் மேற் கொள்ள வேண்டும். அல்லது பால், பழங்கள் மட்டும் சாப்பிட்டு விரதம் மேற்கொள்ளலாம். முருகனுக்கு பால் குடம் எடுத்தல், காவடி சுமந்து செல்லுதல், அழகு குத்தி கொள்ளுதல் போன்ற நேர்த்திக்கடன்களை செலுத்த விரும்புபவர்கள் செலுத்தலாம். பின்பு மாலையில் முருகன் கோயிலுக்கு சென்று முருகனுக்கு அபிஷேகம், அர்ச்சனை செய்து வழிபட வேண்டும்.

இத்தகு பெருமை படைத்த நாளிலே வடலூரில், அருள் பெறும் ஜோதி வள்ளல்அருட்பிரகாச வள்ளலார் நிறுவிய சத்தியஞான சபை உள்ளது. சபையின் தெற்கு வாசல் வழியாக உள்ளே சென்றால் வலது புறம் பொற்சபையும், இடது புறம் சிற்சபையும் உள்ளன.

இவைகளுக்கு மத்தியில் பஞ்சபூத தத்துவங்களை குறிக்கும் 5 படிகளை கடந்து உள்ளே சென்றால் சதுரபீடத்தில் வள்ளலார் ஏற்றி வைத்த தீபம் காணப்படும்.

அதன் முன் 6.9 அடி உயரம், 4.2 அடி அகலம் கொண்ட நிலைக்கண்ணாடி உள்ளது. கண்ணாடிக்கு முன்னால் கருப்பு, செம்மை என பல வண்ணங்களில் ஏழு திரைகள் காணப்படும். இந்த திரைகளை நீக்கி, நிலைக்கண்ணாடிக்கு பின் உள்ள தீபத்தை தரிசிப்பதே ஜோதி தரிசனம் இதை உலகுக்கு உணர்த்தவே வள்ளலார் ஜோதியில் ஐக்கியமானதாகவும் கூறப்படுகிறது.

இதில் நமது ஆயிரம் ஆயிரம் ஆண்டு அனுபவ அறிவு மட்டும் அனுபூதியில் பெற்ற மெய் அறிவும் சேர்ந்து, விண்மீன்கள் சேர்க்கை முதலியன ஆய்ந்து, மிகப் பெரும் வான் சாஸ்திர அறிவுடன், தை பூச தினத்தன்று இறைவழிபாடு செய்தல், மிக உகந்தது எனக் கண்டனர் .

இதற்காக சில விழாக்களையும், ஆலயங்களில் அமைத்தனர் .

இந்த நாளை மிகச் சிறந்த காரியங்களை தொடங்கவும் , இறை உணர்வில் ஆழ்ந்து இருக்கவும் பயன் படுத்திக் கொள்ளுமாறு நினைவுறுத்த விரும்புகிறேன். மனம் ஜீவனில் அடங்கி, ஜீவன் ஆன்மாவில் அடங்கி,ஆன்மா சிவத்துடன் கலந்து விடும், என்பதை காட்டவே தை பூசம்.




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# ஒழுக்கத்தை நிறைவேற்றுவது நமது கடமை

1. ஒழுக்கம் ஒரு மனிதனின் முதுகெலும்பைப் போன்றது. முதுகெலும்புள்ள பிராணிகள் நிமிர்ந்து வேகமாக ஓடி தாங்கள் முடிவெடுத்த திசைக்கே சென்று விடுகின்றன. இதுவே முதுகெலும் பின் பயனாகும். மண்ணில் நெளியும் மண்புழுக்களுக்கு நெளிவத னால் அவைகளுக்கு முதுகெலும்பே இல்லை. அதனால் எங்கும் முடிவெடுத்து ஓடுவதில்லை. அங்கேயே நெளிகின்றன. இதைக்கேட்டு நீ சிறிது சிரிக்கின்றாய். இந்தச் சிரிப்பு மிகவும் முக்கியமானது.

2. ஒழுக்கம் தனக்கென்று ஒரு சரித்திரத்தை வைத்துக் கொண்டிருக்கிறது. ஒழுக்கத்தில் சரித்திரம் எப்படி புகுந்தது கேள்? மண்ணில் புதையுண்டு இறந்துபோன மிருகங்களின் எலும்புகளைத் தோண்டி எடுத்து அதன் வழியே ஆராய்ச்சி செய்து அந்த எலும்புக்கு உண்டான மிருகத்தின் காலம், வயது, உருவம் இவைகளை கண்டுபிடித்து விடுவார்கள். இதுபோல அனைத்தின் சரித்திரமும் இருக்கும்பொழுது ஒரு ஆண் பெண் இவர்களின் உலகச்சரித்திரத்தை அவர்களின் ஒழுக்கமே வெளிப்படுத்தி விடுகிறது.



3. ஒழுக்கத்தைப் பிரச்சாரம் செய்துவிடலாம். காரணம் அதற்கு வேர் விடுகின்ற தன்மை இருக்கிறது. மக்களும் இதன்பால் சீக்கிரம் விழுவதற்கு இதுவே காரணம். இக்கொள்கைக்கு மிக முக்கியமான பொருள் எது தெரியுமா? ஒரு ஒழுக்கமான ஆசிரியர் தேவைப்படுவதே.

4. சாதாரண விளம்பரங்களைப் போன்று ஒழுக்கங்களை இரண்டு வரிகளில் பிரச்சாரம் செய்தால் அது சமுதாய மக்களுக்கு நன்மையை பயக்கவே பயக்காது. ஒழுக்கத்தை சொல்லி அதை பின் பற்ற வேண்டும். அதுவே முக்கியம். ஒழுக்கத்தைப் பின்பற்ற முதலில் நம்மிடம் உள்ள சோம்பி இருக்கின்ற தன்மையைக் களைந்து எறிய வேண்டும்.

5. குறைவாகப் பேசு, அதிகமாக வேலை செய். இதுவே உயர்வான ஒழுக்கம். அதிகமாக பேசி குறைவாக செயல்படுவது உலகிலுள்ள யதார்த்தமான ஒரு நிலை ஆகும். பொது ஒழுக்கம் இதில் ஒருவிதமான பெரிய மேன்மையும் இல்லை. இதை நிறைவேற்றுவது நமது கடமையே. 'இங்கே எச்சில் துப்பாதே' என்பதை நிறைவேற்றுவது நமது கடமையே. அது ஒன்றே உயர்வானது என்று எண்ணி இறுமாந் தால் உனது பெரிய கொள்கை எல்லாம் தண்ணீரில் எழுதிய எழுத் தாகப் போய்விடும்.

6. ஒழுக்கம் என்று நீரில் எழுதி அந்த நீரைக் குடித்தால் உனக்கு ஒழுக்கப்புஷ்டி வந்துவிடுமா? வந்துவிடாது. நல்ல கொள்கையிலே உனக்கு உண்மையான ஒரு தாகம் ஏற்பட வேண்டும். சாதாரண தண்ணீர் தீர்க்கின்ற தாகத்தைப் போன்றது அல்ல இது. ஒன்று மட்டும் தெரிந்து கொள். மனிதனின் தாகத்தைப் போக்க நீர் ஒரு கொள்கையை ஒழுக்கமாக கொண்டுள்ளது. அதனால் அதுவே அதனின் தன்மையாகவும், ஒழுக்கமாகவும் மாறிவிட்டது பார்த்தீர்களா?

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


ஆன்மீகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்




ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

# அஹம்பாவத்தை எவ்வாறு குறைப்பது?

### 1. உடல் நம்முடையது அன்று, அது கடவுளுக்கே சொந்தம் என உணர்தல்

நம்மை உடலுடன் அடையாளப்படுத்திக் கொள்வதே நாம் செய்யும் மிகப் பெரிய தவறு. இரண்டாவது தவறு உடல் என்னுடையது என்ற உணர்வுடன் உடல் மீது அதிக பற்று வைத்தல். அதைக் காட்டிலும் பெரிய தவறு உடலின் தன்மைகளான ஆசைகள், உள்ளுணர்வுகளை வளர்ப்பது. இந்த குறைகள் அதிகரிக்கும்போது, அவற்றைக் கட்டுப்படுத்த முயலாமல் அவற்றின் தாக்கத்திற்கு உள்ளாகிறோம். சில சமயங்களில் நம் புத்தியையும் இழக்கிறோம். ஒரு மரத்தை வெட்ட வேண்டுமென்றால் முதலில் அதன் கிளைகளை வெட்டிய பின்னர் அம்மரத்தை வெட்ட வேண்டும். அதேபோல், நாம் ஆன்மீக பயிற்சி செய்ய வேண்டுமென்றால் நம் உடலின் ஆசைகளைக் களைய வேண்டும் (கிளைகளை வெட்டுவதைப் போன்று).

### 2. 'கடவுள் என்னுடையவர்' என்ற ஆன்மீக உணர்வைக் காட்டிலும் 'நான் கடவுளுக்கு சொந்தமானவன்' என்ற ஆன்மீக உணர்வைக் கொள்ளுதல்.

கடவுளிடம் ஆன்மீக உணர்வைக் கொள்ளும் போது 'கடவுள் என்னுடையவர்' என்று நினைப்பதற்கு பதிலாக 'நான் கடவுளுக்கு சொந்தமானவன்' என்று நினைக்க வேண்டும். இல்லையெனில் அதுவே அஹம்பாவத்திற்கு அடிகோலும். 'நான் கடவுளுக்கு சொந்தமானவன்' என்று எண்ணும்போதே உண்மையாக கடவுளுக்கு சேவை செய்ய முடியும்.

### 3. எல்லாமே கடவுளுக்கு சொந்தம் என்ற விழிப்புணர்வைக் கொள்ளுதல்

கடவுளே இந்த பிரபஞ்சத்தைப் படைத்தவர். அவர் சர்வ வல்லமை உள்ளவர், எங்கும் நிறைந்தவர், அனைத்தையும் உணர்ந்தவர். அவரின் அனுமதியில்லாமல் நம்மால் பேசவும் முடியாது, மௌனமாக இருக்கவும் முடியாது. நம்மால் உடலைத் துறக்கவும் முடியாது, உயிருடன் இருக்கவும் முடியாது. அவரின் அனுமதியில்லாமல் ஒரு இலையும் அசையாது. அதனால் உலகிலுள்ள அனைத்தும் (நம்மைச் சேர்ந்தது என்று நாம் நினைப்பது உட்பட) அவருக்கு மட்டுமே சொந்தமானது. இவ்வுணர்வு ஏற்படுமானால் நம் உடைமைகள் மீது பற்று வைக்க மாட்டோம்.

### 4. கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளார் என்ற உணர்வு ஏற்படுதல்

கடவுள் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளார் என்ற உள்ளுணர்வுடன் நம் வாழ்க்கையை வாழ்ந்தால் அதுவே நம்மைப் பற்றிய எண்ணங்களைக் குறைத்து கடவுள் மீது ஆன்மீக உணர்வு வளர உதவும்.

### 5. கடவுளே எல்லாவற்றையும் நடத்துவிப்பவர் என்ற உணர்வுடன் எவ்வாறு அஹம்பாவத்தைக் குறைப்பது

ஒருமுறை குருதேவர் ரானடே அவர்களுக்கு ஒரு அழைப்பிதழ் வந்தது . அதில் 'நாங்கள் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹத்தை பௌர்ணமியிலிருந்து கொண்டாடப் போகிறோம். நீங்கள் அவசியம் வருகை புரிய வேண்டுகிறோம்' என்று எழுதப்பட்டிருந்தது. இதைப் படித்த குருதேவர், 'நாங்கள் கொண்டாடப் போகிறோம் என்றால் என்ன அர்த்தம்? இது நடக்கப் போகிறது என்றல்லவா சொல்ல வேண்டும்' என்றார்.



ஒரு செயலை செய்து பின் கடவுளுக்கு அர்ப்பணம் செய்வதைக் காட்டிலும் செயலை செய்யும்போதே கடவுளின் நாமஜபத்தை உச்சரித்தல் சிறப்பு. அதனினும் சிறப்பு கடவுளே எல்லாக் காரியங்களையும் நடத்துவிக்கின்றார் என்ற உணர்வுடன் செய்தல்.

நாம் நம் கடமைகளை சரிவர செய்து வர வேண்டும். ஆனால் எது நடந்ததோ, எது நடக்கிறதோ, எது நடக்கப் போகிறதோ அவை அனைத்தும் கடவுளுக்கு சொந்தமானவை, எது நடந்தாலும் அது என் நன்மைக்கே என்ற உணர்வைக் கொள்ள வேண்டும். கடவுளே என் மூலமாக அனைத்தையும் நடத்துவிக்கிறார். நான் இந்த காரியத்தை செய்தேன் என்று கூறக் கூடாது. ஏனென்றால் அப்பொழுது 'நான்' என்பது கடவுளிடமிருந்து தனித்து நிற்கிறது. ஆன்மீகத்தைப் பற்றி பிறருக்கு எடுத்துரைக்கும்போது அவர் கேட்கவில்லை என்றோ, ஒத்துக் கொள்ளவில்லை என்றோ வருந்தக் கூடாது. அதோடு அவர்கள் கேட்டுக் கொண்டாலும் கர்வப்படக் கூடாது. எது

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஒர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

நடந்தாலும் அது கடவுளின் இச்சைப்படியே நடக்கிறது என்ற ஆன்மீக உணர்வைக் கொள்ள வேண்டும்.

ஆன்மீக வாழ்வைப் போன்று உலக வாழ்வி லும் கடவுளே எல்லாவற்றையும் நடத்துவிக் கிறார் என்ற உணர்வைக் கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு 'நான் கற்றேன்' என்பதற்கு பதில் 'கடவுள் எனக்குக் கற்றுத் தந்தார்', 'கடவுள் எனக்கு இப்பணியைத் தந்தார்', 'கடவுளே இந்த கல்யாணத்தை நிச்சயித்துள்ளார்' போன்று நினைக்க வேண்டும். சாதாரண உடலியல் விஷயங்களான பசி, உறக்கம், தும்மல், கொட் டாவி போன்றவற்றைக் கூட கட்டுப்படுத்த முடியாமல் இருக்கும் நாம் எதைப் பற்றி கர்வம் கொள்ள முடியும்?

### 6. கடவுளிடம் பூரண சரணாகதி அடைந்து எவ்வாறு அஹம்பாவத்தை குறைப்பது

மகாபாரதத்தில் ஒரு சம்பவம் உள்ளது. சூதாட்டத்தில் கௌரவர்களிடம் பாண்டவர்கள் தோற்றுப் போனார்கள். துரியோதனன், துச்சாதனனிடம், திரௌபதியை அரசவைக்கு இழுத்து வந்து அவளைத் துகிலுரிய ஆணை யிட்டான். திரௌபதி ஸ்ரீகிருஷ்ணனிடம் பிரார்த் தனை செய்ய ஆரம்பித்தாள். இறுதியாக ஸ்ரீகிருஷ்ணன் அவளுக்கு அபயமளித்து அவளின் சேலையை வளரச் செய்து அவளின் மானத்தைக் காத்தான். அப்பொழுது திரௌபதி ஸ்ரீகிருஷ்ணனிடம் கேட்டாள், 'கிருஷ்ணா, நீ ஏன் இவ்வளவு தாமதம் செய்தாய்?'. அதற்கு பகவான் ஸ்ரீகிருஷ்ணன் பதிலளித்தான், 'நீ உன் சேலையை கெட்டியாக பிடித்துக் கொண் டிருக்கும் வரை உன் மானத்தை நீயே காத்துக் கொள்ள முடியும் என்று நம்பினாய். ஆனால், உன்னால் காத்துக் கொள்ள முடியவில்லை என்று உணர்ந்த பின் என்னிடம் பூரண சரணாகதி செய்தாய். உடனே நான் வந்தேன்'.

### 7. பிரார்த்தனை

'பிரார்த்தனை' என்ற வார்த்தை 'பிரா' மற்றும் 'அர்த்த' என்ற இரு வார்த்தைகளின் சேர்க்கையாகும். அதாவது தீவிரமாக வேண்டுவது என்று அர்த்தம். கடவுளிடம் பணிவோடு ஆழ்ந்து வேண்டுவதே பிரார்த்தனையாகும். (குருபிராப்தி அடைந்த ஒரு சிஷ்யர் குருவிடம் பிரார்த்தனை செய்வார்.) நாம் கடவுளிடம் வேண்டும்போது நம் இயலாமையைத் தெரியப்படுத்துகிறோம். அப்பொழுது கர்த்தா என்ற உணர்வு நம்மிடம் இருப்பதில்லை, கடவுளிடம் உள்ளது. குருவோ கடவுளோ 'ததாஸ்து' (அப்படியே ஆகுக) எனக் கூறுவதால் அக்காரியம் நடப்பதோடு கூட குருவிடம் கடவுளிடம், அவர்களால்தான் இக்காரியம் நடந்தது என்ற ஆன்மீக உணர்வு வளர்கிறது. அதனால் அக்காரியம் பற்றிய அஹம்பாவம் மனதில் எழுவதில்லை.

எந்த ஒரு காரியமும் நடப்பதற்கு வெறும் பிரார்த்தனை மட்டுமே போதாது. அதோடு கூட முயற்சியும் செய்ய வேண்டும். 'பிரயத்னாந்தி பரமேஸ்வர்' என்ற வாக்கின்படி முயற்சி செய்பவருக்கு கடவுள் துணை புரிகிறார். முயற்சி செய்யாதவருக்கு கடவுள் உதவி செய்வதில்லை.

### 8. நன்றி

கடவுளே இந்த பிரபஞ்சம் அனைத்தையும் படைத்தவர். நாம் இப்படைப்பின் ஒரு சிறு அம்சமே. அதனால் 'நான்' என்ற உணர்வு துளிர்விடும்போது அல்லது உலகைப் பற்றிய எண்ணங்கள் எழும்போது கடவுளின் இருப்பை அவரின் எண்ணற்ற ரூபங்களை மனதில் இருத்துவதே, இவ்வாறு நினைப்பதையும் அவனின் கருணையாக உணர்வதே நன்றியுணர்வாகும்.

'பிரார்த்தனை'யின் இன்னொரு அர்த்தம் சரணாகதி ஆகும். நன்றி தெரிவிக்காமல் சரணாகதி பூரணத்துவம் பெறாது. நன்றி தெரிவிப்பதால் குருவிடம் அல்லது கடவுளிடம் கர்த்ருத்வம் சமர்ப்பணம் செய்யப்படுகிறது; அதனால் அஹம்பாவம் குறைகிறது.

### 9. கடவுளின் அருளால் மட்டுமே ஆன்மீக முன்னேற்றம் ஏற்படும் என்பதை உணர்தல்

ஒரு ஸாதகருக்கு தன் ஆன்மீக முன்னேற்றம் கடவுளின் அருளால் மட்டுமே நடக்கிறது, அவரே கர்த்தா என்ற உணர்வு எப்பொழுதும் இருக்குமானால் தன் ஆன்மீக பயிற்சி பற்றிய அஹம்பாவம் அவரின் மனதில் எழாது.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626





## கோவில்களில் இறைவனை வணங்க

# சாஸ்திரங்கள் கூறும் வழிமுறைகள்

கோயில்களுக்கு சென்று இறைவனை வணங்கும் போது முக்கியமான மூன்று வழிமுறைகள் உள்ளதாக ஆகம சாஸ்திரங்கள் கூறுகின்றன.

**உத்தம நமஸ்காரம்:** லட்சுமி வாசம் செய்யும் வேதரேகைகள், மந்திர உபதேசங்கள் நிறைந்த நமது இரண்டு கரங்களை இணைத்து, இதயத்திற்கு அருகில் மார்பிற்கு நேரே மையத்தில் வைத்து, மனதில் மட்டுமே மந்திரங்களைக் கூறிஇறைவனை ஒருநொடியேனும் மனதார வணங்க வேண்டும். மனிதனின் ஆத்ம இருப்பிடமான இதயத்தில் இருந்து வணங்குவதை இறைவன் செவிசாய்த்து கேட்பான் என்பது ஐதீகம்.

**அஷ்டாங்க நமஸ்காரம்:** இவ்வகையான நமஸ்காரமுறை ஆண்களுக்கு மட்டுமே உரித்தானது. இம்முறையில் அஷ்டாங்கமும் (அஷ்டம் எட்டு; அங்கம் உடற்பாகம்) தரையில் படும்படியாக வீழ்ந்து, இறைவனிடம் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வணங்க வேண்டும். தலை, முகம், இரண்டு

தோள்பட்டைகள், உடல், இரண்டு முழங்கால்கள் மற்றும் பாதநுனி ஆகிய உடற்பாகங்களை தரையில் படும்படியாக படுத்துக்கொண்டு இறைவனின் திருப்பாதத்தை சரண டைந்தால் வாழ்வில் பாவங்கள் நீங்கி நற்கதி உண்டாகும்.

**பஞ்சாங்க நமஸ்காரம்:** இந்த நமஸ்காரமுறை பெண்களுக்கு மட்டுமே பொருந்தும். இவ்வகை யான வணங்கல் முறையில் பெண்கள் தங்களது பஞ்சாங்கத்தையும் (பஞ்சம் ஐந்து; அங்கம் உடற்பாகம்) இறைவனிடம் முழுமையாக சமர்ப்பணம் செய்து வணங்க வேண்டும்.

இம்முறையில் தலை, இரண்டு முழங்கால்கள் மற்றும் இரண்டு பாதநுனிகளை பூமியில் வைத்து இறைவனை வணங்கிட நற் பலன்கள் கிட்டும்.



# உலக வரலாற்றில் முதன் முறையாக










# இலவச
# e-mail-book

## எந்தவித கட்டணமுமின்றி இலவசமாக பெற

## உங்கள் இ-மெயில் முகவரியை

## கீழ்காணும் வாட்சப் எண் அல்லது இமெயில் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

வாட்சப் எண் **8825844033**

**aanmeegamalar@gmail.com**

முடிந்த அளவு **Share** செய்து எங்கள் பணிக்கு உதவுங்கள்